பக்கங்கள் : பதினான்கு

உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 17 வெள்ளிக்கிழமை (02.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 06

நீர்வேலியில் இரு இளைஞர்கள் நேற்றிரவு சுட்டுப் படுகொலை!

படங்கள்: கவிதரன்

யாழ்ப்பாணம்,டிசெ.2

நீர்வேலிப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்; மற்றோர் இளைஞர் படுகாயமடைந்தார்.

யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியில், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக நேற்றிரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கு.கிருஷ்ணகுமார் (வயது-34), நீர்வேலி மத்தியைச் சேர்ந்த சி.சிவாகரன் (வயது-26) ஆகியோர் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர். படுகாயமடைந்தவர் நீர்வேலி மத்தியைச் சேர்ந்த சிவலிங்கம் ரூபன் (வயது-24) எனத் (14 ஆம் பக்கம் பார்க்க)

ஐ.தே.கட்சியின் 4 எம்.பிக்கள் ஆளும் தரப்புக்குப் பாயத் தயார்?

கொழும்பு,டிசெ.2

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியமான உறுப்பினர்கள் நான்குபேர் அரசாங்கத்துடன் இணைந்துகொள்வதற்காக அரச முக்கியஸ்தர்களுடன் இரகசியப் பேச்சுகளை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு, இரத்தினபுரி, அம்பாறை, புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறான (14 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டில் இன்று பூரண ஹர்த்தால்

யாழ்ப்பாணம்,டிசெ.2

நீர்வேலிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து குடாநாட்டில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் நேற்று நள்ளிரவு இதற்கான அழைப்பை விடுத்துள்ளது.

இந்தச் சம்பவத்துக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தையும் ஈ.பி.டி.பி.யையும் குற்றஞ்சுமத்தி மேற்படி கழகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் -

''இதே இடத்தில் கடந்த வாரமும் மாவீரர் நாள் வேலைகளில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். இது தவிர கடந்த வாரமும் ஊர்காவற்துறையில் இளைஞர் ஒருவரும் ஈ.பி.டி.பியினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

''ஜனாதிபதித் தேர்தலை குடாநாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்தமையும் மாவீரர்வார நாளை எழுச்சியுடன் அனுஷ்டித்தமையும் இராணுவத்தினரையும் ஈ.பி.டி.பியினரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. எனவே இவர்கள் எமது மக்களின் உணர்வுகளை ஆயுத முனையில் அடக்க எண்ணி மேற்படி படுகொலைகளை அரங்கேற்றுகின்றன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கில் பதற்ற நிலை தணிவு

கண்காணிப்புக் குழுத் தலைவர் தகவல்

கிளிநொச்சி,டிசெம்பர்2

தமிழரின் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரையை அடுத்து வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட பதற்றநிலை இப்போது தணிந்து வருகின்றது.

- இவ்வாறு கூறுகின்றார் இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட். நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் களைச் சந்தித்த பின்னர் 'உதயன்' செய்தியாளருக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரைக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் தலைமையிலான கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சியில் சந்தித்தனர்.

முன்னதாக நேற்றுக்காலை கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலி சென்ற கண்காணிப்புக் குழுத்தலைவரும், ஏனைய பிரதிநிதிகளும் யாழ்ப்பாணத்தில் களநிலைமையைப் பார்வை[illegible]ட்டனர்.

பின்னர் தரைவழியாக கிளிநொச்சிக்கு அவர்கள் வந்தனர். நேற்றுப்பிற்பகல் 3 மணி முதல் 4 மணிவரை புலிகளின் தலைவர்களோடு அவர்கள் கலந்துரையாடினர்.

பேச்சை முடித்துக்கொண்டு மாலையில் ஓமந்தை வழியாக கொழும்பு செல்வதற்கு (14 ஆம் பக்கம் பார்க்க)

மறியல்போராட்டத்தில் ஈடுபட்டவர்களை செயலகக் குழு சந்தித்தது

யாழ்ப்பாணம்,டிசெ.2

இடம்பெயர்வு நிவாரணத்தை தொடர்ந்தும் வழங்குமாறு கோரி பிரதேச செயலகங்கள் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட வலி.வடக்கு பகுதி மக்களை யாழ். மாவட்ட செயலக அதிகாரிகள் நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.மாவட்ட செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன், யாழ் சமூர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.மகேஸ்வரகுமார் ஆகியோரே மறியல் போராட்டம் இடம்பெற்ற தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு நேரடியாக விஜயம்செய்து மக்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பு குறித்துக் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட செயலக அதிகாரி ஒருவர் -

(14 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் கவலை தரும் விதத்தில் வன்முறை

கண்காணிப்புக் குழுவிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி,டிசெ.2

தமிழர் தாயகத்தில் அரச இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் வன்முறைகள் அதிகரித்து வருவது குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கவலை தெரிவித்தார்.

வன்னிச் செய்திகள் இவ்வாறு தெரிவித்தன.

கிளிநொச்சியில் நேற்று சு.ப.தமிழ்ச்செல்வனை கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் தலைமையிலான குழு சந்தித்துப் பேசியது. அப்போதே இக்கவலையை தமிழ்ச்செல்வன் வெளியிட்டார்.

அரச இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் தொடர்ந்து வரும் வன்முறைகள், மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக் (14 ஆம் பக்கம் பார்க்க)

கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கு வன்னி செல்ல ஹெலி வசதி இல்லை

மஹிந்த பதவியேற்ற பின்னர் நிலைமை

கொழும்பு,டிசெ.2

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் நேற்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிப் பெருநிலப்பரப்பிற்குச் செல்ல பாதுகாப்பு அமைச்சு ஹெலிகொப்டர் வசதிகளை வழங்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், நேற்றைய தினம் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வழமையான விமானசேவை மூலம் யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து தரை மார்க்கமாக வன்னி செல்லவேண்டிய நிலை ஏற்பட் (14 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளுடனான பேச்சுக்கான உத்தியை இந்தியாவுக்கு இலங்கை அரசு விவரிப்பு

வெளியுறவு அமைச்சர் மங்கள நேற்று மன்மோகன்சிங்குக்கு விளக்கம்

புதுடில்லி,டிசெ.2

இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களை எத்தகைய விதத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளது என்பதை இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குக்கு எடுத்து விளக்கியிருக்கிறார்.

வெளிவிவகார புதிய அமைச்சர் மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் இரவு புதுடில்லி சென்றார். அங்கு நேற்றுமுற்பகல் இந்திய வெளியுறவு இணையமைச்சர் இ.அகம்மதுவை (14 ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் முடிவுக்கு எதிராக வழக்கு; ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம்!

கொழும்பு,டிசெ.2

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு சட்டப்படி நடக்கவில்லை. அதனைச் செல்லுபடியற்றது என உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்று கோரி ஐக்கிய தேசியக் கட்சி உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில், தேவைப்பட்டால் சர்வதேச நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் அக்கட்சி தெரிவிக்கின்றது.

நேற்றுக்காலை ஐ.தே.கட்சி தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க. பிரதிப் பொதுச்செயலாளர் திஸ்ஸ (14 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வில் பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் எஸ்.ரவிராஜ் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், எய்ட்ஸினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நலன் வேண்டி தீபம் ஏற்றி பிரார்த்தனை செய்வதையும் கலந்துகொண்டோர்களில் ஒரு பகுதியினரையும் எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கவிதரன்)

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் எய்ட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.2

உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டச் சுகாதாரத் திணைக்களம், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், யுனிசெவ் நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் நேற்றுப் பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றன.

பிரதி மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கள விளக்கேற்றல், வரவேற்பு நடனம் என்பவற்றுடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில், கௌரவவிருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ்.ரவிராஜ், உலக சுகாதார ஸ்தாபன ஆலோசகர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

"வடக்கு - கிழக்கு மாகாண எய்ட்ஸ் நிலைவரம்" தொடர்பான விளக்கவுரையினை ஜீ.நக்கீரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து எய்ட்ஸினால் பாதிக்கப்பட்டவர்கள் நலன்பெறவேண்டி நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் ஒளியேற்றி சுமார் 3 நிமிடம் இறை பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

பின்னர், எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டுச் சுகாதாரத் திணைக்களத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இறுதியாக, எச்.ஐ.வி. எய்ட்ஸ் தடுப்பு நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் கே.பிரசாந்தன் நன்றியுரை நிகழ்த்தினார்.

நாடகம், பட்டிமன்றம், நடனம் முதலிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(எ-13)

தெற்கில் இணக்கத்தை ஏற்படுத்தும் சர்வகட்சி மாநாடு அடுத்த வாரத்தில்!

அரசுத் தரப்பில் அறிவிப்பு

கொழும்பு,டிசெ.2

விடுதலைப் புலிகளுடன் அமைதி முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளிடையே கருத்தொற்றுமையைப் பெறுவதற்கான சர்வகட்சி மாநாடு அடுத்த வாரம் நடைபெறவுள்ளதாக அரசாங்கம் நேற்று அறிவித்திருக்கிறது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கான செய்தியாளர் மாநாடு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போது அரசாங்கத்தின் இந்த அறிவிப்பை அரசமைப்பு விவகார அமைச்சர் டியூ குணசேகர வெளியிட்டார்.

அமைதி முயற்சிகளில் புதிய அணுகுமுறையொன்றை பின்பற்றும் நோக்கில், நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுடனும் பேசுவது அரசின் நோக்கமென்றும் இதன்மூலம் எட்டப்படும் பொது உடன்பாடு விடுதலைப் புலிகளிடம் முன்வைக்கப்படுமென்றும் அமைச்சர் சொன்னார்.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பது பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-க)

கிளிநொச்சியில் இரு தினங்கள் மின்தடை

யாழ்ப்பாணம்,டிசெ.2

கிளிநொச்சி நகரிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் நாளை சனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சாரசபையினர் அறிவித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளுக்கு கடந்த 23ஆம் திகதி தொடக்கம் 24 மணிநேர மின்சாரம் பரீட்சார்த்தமாக வழங்கப்பட்டது. இவ்வாறு பரீட்சார்த்த மின்சாரம் வழங்கப்பட்டபோது மின் இயந்திரங்களில் ஏற்பட்ட மாற்றங்களைச் சீர்செய்யும் வகையில் தற்போது இரு தினங்கள் மின்சாரம் தடைப்படுவதாகவும் -

திருத்த வேலைகள் முடிவுற்றதும், தாமதியாது மின்சார விநியோகம் வழங்கப்படும் என்றும் - மின்சார சபையினர் அறிவித்துள்ளனர். (எ)

ஆசிரிய கலாசாலை மாணவர்கள் இன்று அடையாள பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.2

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவர்கள் மேற்கொண்டுவரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளின் ஆசிரிய மாணவர்கள் இன்று வெள்ளிக்கிழமை ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

மாவீரர்தின ஏற்பாடுகளின்போது மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அத்துமீறல்களைக் கண்டித்து மட்டக்களப்பு ஆசிரியகசலாசாலை மாணவர்கள் தொடர் பகிஸ்கரிப்புப் போராட்டத்தை நடத்திவருகின்றனர். இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே இன்றையதினம் ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக மேற்படி கலாசாலைகளின் மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர்.

(எ-410)

முகிழ்நிலை ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.டிசெ.2

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் தற்பொழுது உள்ளகப் பயிற்சியில் இருக்கும் முகிழ்நிலை ஆசிரியர்களுக்கு நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த கலந்துரையாடல் இடம்பெறமாட்டாது என்று பீடாதிபதி அறிவித்துள்ளார். (எ)

இ.தொ.கா. மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்குக!

மஹிந்தவைக் கோர ஜே.வி.பி. தீர்மானமாம்

கொழும்பு,டிசெ.2

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரமுகர்கள் அமைச்சர்களாக இருந்த நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாகப் பகிரங்க விசாரணைகளை நடத்த ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி ஜே.வி.பி. கோரிக்கை விடுக்கவுள்ளது.

இம்மோசடிகள் தொடர்பான விவரங்களைத் தாங்கள் திரட்டிவருகின்றனர் என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் வீடமைப்பு நிர்மாணத்துறை, நகர அபிவிருத்தி, தேசிய நீர்வழங்கல்கள் அமைச்சராக இருந்தபோது தோட்ட நலன்புரி நடவடிக்கைகளுக்காக 70 லட்சம் ரூபா பெறப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஹட்டன், டிக்கோயா, பொகவந்தலாவை ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள மாடிவீட்டுத் திட்டங்களில் சமூக அபிவிருத்தி நிலையங்கள், வாசிகசாலைகள், விளையாட்டு மைதானங்கள் என்பனவற்றை அமைக்கவும், அவற்றிற்குத் தேவையான தளபாடங்கள், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள், கணனி மற்றும் தையல் இயந்திரங்களை வழங்குவதற்காகவுமே இத்தொகை பெறப்பட்டுள்ளதாம். ஆனால், அங்கு வாழும் தோட்டத் தொழிலாளர்கள் அப்படி எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை எனக் கூறுகின்றனர். - என்கின்றது ஜே.வி.பி.

இதேபோன்று இ.தொ.கா. நிதிச் செயலாளர் முத்துசிவலிங்கம் அமைச்சராக இருந்த தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு, சமூக அபிவிருத்தி அமைச்சிலிருந்து நலன்புரி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலும் ஊழல்கள் இடம்பெற்றுள்ளனவாம்.

இதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பல லட்ச ரூபா பெறுமதியான பொருள்கள், நுவரெலியா பிரதேசசபையின் களஞ்சியசாலையாகப் பயன்படுத்தப்பட்டு வந்த தனியார் வீடு ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை இரகசியப் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர். இவை தொடர்பான விசாரணைகளும் நடைபெறுகின்றன.

இந்த அமைச்சின் நேரடி நிர்வாகத்தின்கீழ் இயங்கும் தொண்டமான் நிறுவன நிதி நிர்வாகத்திலும் தில்லுமுல்லுகள் இடம்பெற்றுள்ளதாகப் புகார்கள் கிடைத்துள்ளன.

இது ஒரு தேசிய சொத்து மோசடியாகும். சிலவேளை இவை தவறான குற்றச்சாட்டுகளாகக் கூட இருக்கலாம்.

ஆனால், உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும். மோசடிப் பேர்வழிகள் எவராக இருந்தாலும் தண்டனைக்குட்படத்தப்படவேண்டும்.

எனவே, எமக்குக் கிடைத்துள்ள புகார்கள் தொடர்பாக மேலும் விவரங்களைத் திரட்டுகின்றோம். முழு விவரங்களையும் ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பதுடன், அவற்றை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படியும் வலியுறுத்தவுள்ளோம். - எனவும் அந்த ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார். (எ-க)

தெபுவனவில் கோர வாகன விபத்து: ஐவர் பலி; மூன்று பேர் படுகாயம் !

களுத்துறை,டிசெ.2

களுத்துறை மாவட்டத்தின் தெபுவன பொலீஸ் பிரிவிலுள்ள கலபாத்த பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்துச் சம்பவமொன்றில் ஐந்து பேர் உயிரிழந்தனர்; மூன்றுபேர் படுகாயமடைந்தனர்.

வான் ஒன்றும், பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றிருக்கிறது. தெபுவன பகுதியிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பெண்களை இறக்கிவிட்டு ஹொரணை நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த பஸ், அதே தொழிற்சாலைக்கு உத்தியோகத்தர்களை ஏற்றிச்சென்ற வானுடன் மோதியது. இதில் இரண்டு வாகனங்களும் பலத்த சேதமடைந்தன.

விபத்தில் புஷ்பகுமார (37 வயது), தேவரூபி செனவிரட்ன (25 - வயது) ஆகியோர் அதே இடத்தில் உயிரிழந்தனர். சாரதியான விஜயரட்ன (28-வயது) ஹொரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். காயமடைந்தவர்களில் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் ஏனையோர் ஹொரணை வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்

அதிக வேகமே இந்த இரண்டு வாகனங்களும் விபத்துக்குள்ளானதற்கான காரணமெனப் பொலீஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கிறது. தெபுவன பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை நடத்திவருகின்றனர். (எ-க)

கடலில் மீனவரின் வலையில் சிக்கிய பெட்டியில் 4 மோட்டார் குண்டுகள்

புத்தளம், கற்பிட்டி கடற்பரப்பிலிருந்து மீட்கப்பட்ட இரும்புப் பெட்டியிலிருந்து 3 அடி நீளமான 4 மோட்டார் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மீனவர்களின் மீன்பிடி வலையிலேயே இந்தப் பெட்டி சிக்கியுள்ளது. ஏதேனும் தங்கப்புதையல் இப்பெட்டியில் இருக்கலாமென்று கருதி மீனவர்கள் அதனைத் திறந்த பொழுது அதில் 3 அடி நீளமான மோட்டார் குண்டுகள் [illegible]ப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் குண்டுகள் ஏதேனும் நாசகாரச் செயல்களுக்காகக் கடத்தப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்த கற்பிட்டி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி லக்ஸ்மன் ரன்வல ஆராய்ச்சி இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகக் கூறினார். (எ-க)

சு.கவில் சரியாக வேலைசெய்யாத அமைப்பாளர்களுக்கு 'கல்தா'!

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, ஒழுங்காகச் செயற்படாத அமைப்பாளர்களைக் கண்டறியுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவைக் கேட்டிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் பலர் கிரமமாக அரசியல் பணிகளை மேற்கொள்ளவில்லையென்றும், இதன் காரணமாகப் பல இடங்களில் கட்சியின் வாக்கு வங்கி பலவீனமடைந்திருப்பதாகவும் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளனர். இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் பலர் நீக்கப்பட்டு அந்த இடங்களுக்குப் புதிய உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பில் கட்சியின் செயலாளர் தற்போது ஆலோசனை நடத்தி வருகிறார் எனத்தெரிகிறது.

முன்னதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் திறமையற்ற அமைப்பாளர்கள் தொடர்பில் செயலாளர் மைத்திரிபால அறிக்கையொன்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-எ)

உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

நோர்வேயின் பக்கம்

திரும்பும் இந்தியாவின் பார்வை

இலங்கை நிலைவரம் குறித்து இந்தியா அதிகம் சிரத்தை எடுக்கத் தொடங்கியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இலங்கையின் புதிய ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் குறுகிய காலக்கெடு வழங்கி இறுதி எச்சரிக்கை விதித்துள்ள நிலையில் அடுத்த ஆண்டில் பெரும் யுத்தம் வெடிக்கக்கூடிய புறநிலைகள் ஏற்பட்டிருக்கின்றன எனப் புதுடில்லி வட்டாரங்கள் கருதுகின்றன என்றும் -

இந்த நெருக்கடி நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பது குறித்து ஆராய்வதற்காக அவசர மாநாடு ஒன்று புதுடில்லியில் நாளையும் மறுதினமும் நடைபெற இருக்கின்றது என்றும் - செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்தத் திருப்பத்தையும் இந்தியாவின் தென்மண்டல இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பி.எஸ்.தர்காரின் திடீர் இலங்கை விஜயத்தையும் ஒரே பின்னணி கொண்டமையாகவே நோக்கவேண்டும்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் சிரத்தை - கவனம் - கரிசனை - போன்றவற்றிலும் ஒரு திருப்பம் இருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இங்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணி வகிப்பது நோர்வே. அதன் பங்களிப்பு பக்கத்து வல்லாதிக்க நாடான இந்தியாவின் தரப்புக்கு ஆரம்பகாலம் தொட்டே அதிருப்தியளிப்பதாக இருந்துவந்தது - அவ்வப்போது அவ்வாறே செய்திகள் வெளியாகி வந்தன. ஆனால், அந்த நிலைப் பாட்டிலேயே ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையின் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட்டமைத்துள்ள பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கு சக்திகள் அனுசரணைப் பணி வகிக்கும் நோர்வேயை அப்பணியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என வற்புறுத்தி வருகின்றன. அந்த வற்புறுத்தலுக்கு அடிபணிபவர் போலவே புதிய ஜனாதிபதியின் போக்கும் உள்ளது. தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் முக்கிய நான்கு இடங்களில் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டிருக்கின்றார்.

ஒன்று - அவரது தேர்தல் வெற்றி அறிவிக்கப்பட்டதும். இரண்டாவது - அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும். மூன்றாவது - நாடாளுமன்றத்தில் தமது அரசின் கொள்கை விளக்கத்தை வெளியிட்டபோது. நான்காவது - கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளைச் சந்தித்தபோது.

இந்த நான்கு தடவைகளும் இனப்பிரச்சினை, அமைதி முயற்சிகள் போன்றவை குறித்துக் குறிப்பிட்ட ஜனாதிபதி மஹிந்த, அந்த அமைதி முயற்சிகளுக்கு அனுசரணைப் பணி என்ற முக்கிய பங்கை வகிக்கும் நோர்வே குறித்து எதுவும் நேரடியாகச் சுட்டிக்காட்டிக் கருத்துக்கூறவில்லை. இது விடயத்தில் அந்தளவு தூரம் தமது கூட்டமைப்பில் உள்ள பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் அழுத்தத்துக்குள் சிக்கியிருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த.

அத்தகைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, நோர்வேயின் அனுசரணைப் பணியைத் தொடரும்படி அழுத்தத்துடன் கூடிய ஆலோசனையைக் கொடுப்பதற்கு புதுடில்லி அரசுத் தலைமை தீர்மானித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

இலங்கையில் நோர்வேயின் அனுசரணைப் பணியை ஆரம்பத்தில் அவ்வளவு தூரம் விரும்பாத இந்தியா, இப்போது தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருப்பது ஏன்?

இந்தியாவுக்கும் நோர்வேக்கும் இடையிலான வர்த்தக, எரிபொருள் விற்பனை விடயங்கள் தீவிரமடைந்திருப்பது மட்டும் இந்த மாற்றத்துக்குக் காரணமா? இல்லை. அதற்கு அப்பாலும் விடயம் உண்டு.

அதை அறிவதற்கு அண்மைக் காலத்தில் இலங்கையில் புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு தனி அமைச்சுக் குறித்து நாம் கவனிக்க வேண்டும். ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தின் இறுதியில் 'பெற்றோலிய மூலவள அமைச்சு' என்ற இந்தத் தனி அமைச்சு உருவாக்கப்பட்டது. இலங்கையின் கடல் சூழலில் பெருமளவு பெற்றோலியக் கனியவளம் இருப்பதாகவும், அதைப் பயன்படுத்தி அதிக வருவாயை ஈட்டி, நாடு சுயீட்சமடையமுடியும் எனவும் அப்போதைய ஜனாதிபதியும், மூத்த அரச அதிகாரிகளும், நிபுணர்களும் கூறிவந்தனர்.

உலகத்தில் ஆழ்கடலில் எரிபொருள் அகழ்ந்து எடுப்பதில் தனித்திறமையும், சாதனையும் நிலைநாட்டி முன்னணியில் நிற்கும் நாடு நோர்வே.

இலங்கையைப் பொறுத்தவரை மன்னார் வளைகுடாவை ஒட்டிய கடல் பிரதேசத்தில் - தமிழர் தாயகத்துக் குரிய பகுதியில் - ஆழ்கடலில் எரிபொருள் வளம் நிறைய இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை அரசின் பங்களிப்போடு இந்திய, நோர்வேத் தரப்புகளையும் சேர்த்து தமிழர் தாயகத்தின் இந்த வளத்தைச் சூறையாடுவதற்கான முத்தரப்புக் கூட்டுத் திட்டம் ஒன்று இரகசியமாகத் தயாராகியிருப்பதாகவும், இதற்கான காய் நகர்த்தல் வேலைகள் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இவ்வாறு தமிழர் தாயகத்தின் மூல வளத்தை அள்ளுவதற்கான கூட்டுத் திட்டத்தில் ஏற்பட்ட நல்லுறவே நோர்வே மீது இந்தியாவின் திடீர் காதலுக்கும், பாசத்துக்கும் காரணம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இலங்கைத் தீவின் வளத்தைச் 'சுத்துவதற்கு' முயலும் இத்தகைய போக்குக் குறித்து தமிழர் தாயக மக்கள் மட்டுமல்ல, தென்னிலங்கையில் தேசப்பற்றுள்ள தேசிய அமைப்புகள் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் இயக்கங்களும் கூட கவனத்தில் கொள்வது கட்டாயமாகும்.

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பிரதேச செயலகங்களின் முன்பாக மறியல்

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.2

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து உடுவில், கோப்பாய்,தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள நலன்புரி முகாம்களில் வசிக்கும் மக்கள் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள சமுர்த்தி முத்திரையை நிறுத்தித் தமக்குரிய இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணத்தை வழங்குமாறு கோரி பிரதேச செயலகங்களின் முன்னால் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் உடுவில் பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பமான இந்த மறியற்போராட்டம் நேற்று தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

இராணுவ உயர்பாதுகாப்பு வலயம் காரணமாக வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த பெருமளவான மக்கள் கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நலன்புரி நிலையங்களில் மிகநீண்ட காலமாக வசித்துவருகின்றனர்.

நேற்றுமுன்தினம் உடுவில் பிரதேச செயலகம் முன்பாகப் போராட்டத்தை ஆரம்பித்த மக்கள் நேற்று முதல் தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களின் முன்பாகவும் தமது போராட்டத்தை விஸ்தரித்தனர்.

நேற்றுக்காலை உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களின் முன்பாகக் கூடிய மக்கள் அவற்றின் நுழைவாயிலை மூடி மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தெல்லிப்பழையில்...

இதனால் பிரதேச செயலகங்களுக்குக் கடமை நிமித்தம் வருகை தந்த உத்தியோகத்தர்கள் உள்ளே செல்ல முடியாத நிலையில் வீதியோரத்தில் நீண்டநேரம் காத்திருந்தனர்.

இதன்காரணமாகப் பிரதேச செயலகத்தின் பணிகள் யாவும் நேற்று முழுநாளும் பாதிக்கப்பட்டன.

இடம்பெயர்ந்து மிக நீண்டகாலமாக நலன்புரி நிலையங்களில் இன்னல்பட்டு வாழ்ந்துவரும் எமக்கு நிவாரண முத்திரை மூலமாக உணவு வழங்கல் எமக்குப் பேருதவியாக இருந்தது.

இந்த முத்திரை மூலம் எங்களது அரைவயிறைக் கழுவி வாழ்க்கை நடத்தி வந்தோம். ஆனால், இந்த நிவாரண முத்திரை கடந்த மூன்று மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலாகச் சமுர்த்தி முத்திரை வழங்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. சமுர்த்தித் திட்டமானது சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதற்கானது. அது மக்கள் அனைவருக்கும் பொதுவான திட்டமாகும். இராணுவ ஆக்கிரமிப்பால் எமது நிலத்திலிருந்து விரட்டப்பட்ட எமக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரண முத்திரை வழங்கப்படவேண்டும் அல்லது மீளவும் நாம் எமது சொந்த இடத்திற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றிச் சென்று வாழ அனுமதிக்கப்படவேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் தெரிவித்தனர்.

தமது கோரிக்கைகளுக்கு எழுத்து மூலம் உறுதியளிக்கப்படும் வரை பிரதேச செயலகத்தை மூடக்கும் வகையில் தொடர்ச்சியான மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (8-7-86-17)

கோப்பாயில்...

உடுவிலில்...

படங்கள்: பிரபா, நேசன்.

பேரலையால் பாதிப்புற்ற அரச ஊழியருக்கு வட்டியில்லாத சம்பள முற்பணக் கடன்கள்

வடக்கு - கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.2

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் வீடுகளை இழந்த அல்லது சேதமடைந்த அரச அலுவலர்களுக்கு வட்டியில்லாத சம்பள முற்பணக் கடன்கள் வழங்கப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வீடுகள் சேதமடைந்த அரச அலுவலர்களுக்கு மேற்படி கடன் வழங்குவதற்கெனத் திறைசேரி 100 மில்லியன் ரூபாவை மாகாண அரசுக்கு வழங்கியுள்ளது.

இதன்மூலம் பதவிநிலை அதிகாரிகளுக்கு வீடு முழுமையாகச் சேதமடைந்திருந்தால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் பகுதியாகச் சேதமடைந்திருந்தால் 90 ஆயிரம் ரூபாவும் வீட்டு உபகரணங்கள் இழக்கப்பட்டிருந்தால் 48 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்படும்.

ஏனைய அதிகாரிகளுக்கு முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் பகுதியாகச் சேதமடைந்த வீடுகளுக்கு 75 ஆயிரம் ரூபாவும் சேதமடைந்த வீட்டு உபகரணங்களுக்கு 48 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

சிற்றூழியர்களுக்கு வீடுகள் முழுமையாகச் சேதமடைந்தால் 90 ஆயிரம் ரூபாவும் பகுதியாகச் சேதமடைந்திருந்தால் 60 ஆயிரம் ரூபாவும் வீட்டு உபகரண இழப்பிற்கு 48 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

மேற்படி முற்பணக் கடன்கள் 5 வருடங்களில் தவணை அடிப்படையில் வட்டியில்லாது அறவிடப்படும் எனவும் - விண்ணப்பதாரர்கள் தத்தமது திணைக்களத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறும் பிரதம செயலாளர் தெரிவித்தார்.(8-185-202)

யாழ். வலயத்தின் 10 பாடசாலைகள் ஜப்பானின் 'ஜெய்கா' திட்டத்தின்கீழ்

நிர்வாகம், முகாமைத்துவம், கல்வி ஆகியவற்றை முன்னேற்ற நடவடிக்கை

அச்சுவேலி,டிசெ.2

2006ஆம் ஆண்டில் ஜப்பான் 'ஜெய்கா' (JICA) திட்டத்தில் யாழ். கல்வி வலயத்தில் உள்ள 10 பாடசாலைகள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன.

'ஜெய்கா' திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு யாழ். கல்வி வலயத்தில் உள்ள கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய மூன்று கல்விக் கோட்டங்களிலும் தெரிவுசெய்யப்பட்டுள்ள 75 பாடசாலைகளில் இருந்தும் பொருத்தமான பத்துப் பாடசாலைகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

பத்துப் பாடசாலைகளையும் தெரிவு செய்வதற்கு ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட 75 பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில் 'ஜெய்கா' திட்டத்தின் அடிப்படை அம்சங்கள் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

75 பாடசாலைகளிலிருந்து பத்துப் பாடசாலைகளையும் தெரிவுசெய்வதற்கு ஜப்பானிய அதிகாரிகள் குழு அடுத்த வருட முற்பகுதியில் பாடசாலைகளுக்கு நேரடியாக விஜயஞ்செய்யவுள்ளது.

2006ஆம் ஆண்டில் 'ஜெய்கா' திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்படவுள்ள பாடசாலைகளில் 'ஜெய்கா' திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 'செய்ரி', 'செய்றோன்', 'செய்ரோ', 'செய்கெற்சு', 'சுட்சுகே' ஆகிய ஐந்து செயற்றிட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் தலா 4 லட்சம் ரூபா நிதியை ஜப்பான் அரசு வழங்கவுள்ளது.

குறிப்பிட்ட காலப்பகுதியில் ஐந்து செயற்றிட்டங்களின் ஊடாகவும் பாடசாலைகளின் நிர்வாகம், கல்வி முகாமைத்துவம், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்படும். இதற்கான ஆலோசனைகளை 'ஜெய்கா' திட்ட அதிகாரிகள் காலத்திற்குக்காலம் நேரடியாக வழங்குவர் என்று கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தார். (8-11)

நாளை

கார்த்திகை 18
சனிக்கிழமை
03.12.2005
திதி: துதியை
முன்னிரவு 06.20 வரை
நட்சத்திரம்: மூலம்
முன்னிரவு 09.48 வரை
சுபநேரம்: 03.15- 04.45
ராகுகாலம்: 09.15 - 10.45
(யாவும் பழைய நேரப்படி)

உதயவாக்கு

தியாகத்திலும் பணிவுதான் மிகப் பெரியது. - ஓர் அறிஞன்.

விடுதலைப் புலிகள் இயக்கம் தள்ளியுள்ள பந்தை புதிய ஜனாதிபதி எவ்வாறு கையாளப்போகின்றார்?

புதிய ஜனநாயகக் கட்சி செயலர் கேட்கிறார்

"புதிய இலங்கையைக் கட்டியெழுப்பப் போகிறேன் எனக் கூறும் ஜனாதிபதி, தனது முதலாவது கொள்கை விளக்க உரையில் அதற்குரிய கொள்கைகள், அடிப்படைகள் எதனையும் முன்வைக்கவில்லை. கடந்த 27 வருட காலமாக நடைபெற்றுவரும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் பின்பற்றப்பட்ட தவறான பொருளாதாரக் கொள்கைகளை மாற்றுவதற்கான எந்தப் புதிய கொள்கைகளும் முன்வைக்கப்படவில்லை"

-இவ்வாறு புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது கொள்கை விளக்க உரை குறித்து புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழுவின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யுத்தமாக மாற்றப்பட்ட தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கு சாதகமான வழிகளில் பேச்சுகள் - சமாதானம் என்பவற்றை நோக்கிச் செல்லக் கூடிய முன்மொழிவுகளைபுதிய ஜனாதிபதியின் கொள்கைவிளக்க உரை கொண்டிருக்கவில்லை. பழைய விடயங்கள் புதிய பாணியில் 'மஹிந்த சிந்தனை' என்ற பெயரில் முன்னெடுக்கப்படும் நிலையே காணப்படுகின்றது. எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய சர்வதிகாரக் கதிரைக்கு வந்துள்ள புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாடும் மக்களும் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைக்குரிய புதிய பாதையில் பயணிப்பதற்குரிய எந்தவொரு அறிகுறியையும் வெளிப்படுத்தவில்லை என்பதையே அவரது கொள்கை விளக்க உரை எடுத்துக் காட்டியுள்ளது.

யுத்தமல்ல, கௌரவமான சமாதானமே தனது வழிமுறை என்ற புதிய ஜனாதிபதி முன்வைத்துள்ள அழைப்புக் குரலை கவனத்தில் கொண்டு புலிகள் இயக்கத்தின் தலைவர் உரிய தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு பந்தை ஜனாதிபதியின் பக்கம் சென்று விழ வைத்துள்ளார். ஆனால், ஒற்றையாட்சி என உரத்துக் கூறிக்கொண்டு தாயகப்பிரதேசம், சுய நிர்ணய உரிமை, சுயாட்சி என்பனவற்றை மறுத்துவரும் புதிய ஜனாதிபதி எவ்வாறு புலிகள் இயக்கத்தின் பந்தைக் கையாளப் போகிறார் என்பது மிக முக்கிய கேள்வியாகும். தன்னைச் சுற்றி நிற்கும் பேரினவாதப் பிசாசுகளின் அழுத்தங்களையும், தடைகளையும் மீறி பழைய நிலைப்பாடுகளைக் கைவிட்டு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, தீர்விற்கான நாட்டம் என்பவற்றின் அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேச்சுகளிலும், தீர்விலும் உறுதியாகவும், உளச்சுத்தியோடும் செயல்படுவதற்குரிய முதல் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

புதிய இலங்கையை அவர் கட்டியெழுப்ப வேண்டுமானால் தேசிய இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்களும் புலிகள் இயக்கமும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான தீர்வுத் திட்ட யோசனைகளை முன்வைக்க வேண்டும் அதேவேளை தாராளமயம் தனியார்மயத்தால் சின்னாபின்னப்படுத்தப்பட்ட நாட்டின் தேசிய பொருளாதரத்தை மீளக்கட்டியெழுப்ப அர்த்தமுடையதும் நடைமுறை சாத்தியமானதுமான மாற்றுத்திட்டம் முன்வைக்கப்படுவது அவசியம். அதன் அடிப்படையிலேயே பொருட்களின் வேகமான விலை உயர்வு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற மக்கள் மீதான பாரிய சுமைகளைக் குறைக்க முடியும்.

ஆதலால், புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது நிறைவேற்று அதிகாரத்தை நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்திற்காக சாதகமான வழிகளில் பயன்படுத்த தயாரானால் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முன்வைத்து புலிகள் இயக்கத்துடனான பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறே தாராளமயம், தனியார் மயம் விளைவித்து வரும் பொருளாதார, சமூக, பண்பாட்டு ஊடுருவல்கள், நாசங்களைத் தடுத்து மாற்றுத் திட்டத்தை முன்வைத்து, நடைமுறைப் படுத்த வேண்டும். இல்லாதுவிடின் இவை இரண்டுக்குமான மக்களின் வெகுஜனப் போராட்டங்கள் முன் செல்வதை தவிர்க்க முடியாத சூழலே உருவாகும் என்பதையும் எமது புதிய ஜனநாயகக் கட்சி சுட்டிக்காட்டுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி

பணிநிலை வேண்டுகை

உலகெங்கும் தன் ஒளிபரப்பு வீச்செல்லையை விரித்துள்ள தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் கண்ணியமான காட்சிப்படுத்தலுடன் கூடிய விளம்பரங்களில் நடிப்பதற்கான ஆண், பெண்கள் உடன் வேண்டப்படுகின்றனர்.

பணிக்கான ஆற்றல் நிலை

★ 18-30 வயதுக்கு உள்ளடங்கியோர்
★ தமிழை வழுவின்றியும் ஆற்றொழுக்காகவும் உச்சரிப்பதுடன் விளம்பரத்துக்கு ஏற்ற சொல்வளத்தையும் கொண்டிருத்தல்.
★ முகக்குறிப்புடன் குரல் கூடிய நடிப்புத் திறன்
★ தரப்பட்ட விளம்பரங்களையும் வெளிப்படுத்தும் ஆளுமை
★ காட்சிகளில் தோன்றும் பணியென்பதால் பார்வையாளர்களின் கவன ஈர்ப்பை தம் பக்கம் எடுக்கும் தகுதிகளை கொண்டிருத்தல் வேண்டும்.
★ நடன ஆற்றல் மேலதிக ஆளுமையாகக் கொள்ளப்படும்.

அண்மையில் எடுத்த முழு அளவு நிழல் படத்துடன் வருகை தரவும்.

நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், காலம்

இடம்: கிளிநொச்சி பண்பாட்டு மண்டபம்.
காலம்: 04.12.2005 ஞாயிற்றுக்கிழமை, காலை 10 மணிக்கு.

மேலதிக விவரங்களுக்கு:
தமிழீழத் தேசியத் தொலைக்காட்சித் தொடர்பகம்
யாழ்.முதன்மைச்சாலை, கிளிநொச்சி.
(43473)(32-15-19) T.P.: 021 228 5816

சாமியே சரணம் ஐயப்பா

அகில இலங்கை
யாழ்.கோண்டாவில் கிழக்கு
அருள்மிகு சபரீச ஐயப்பன் தேவஸ்தானம் - 2005

வருடாந்த மகரஜோதி மண்டல விரத பிரம்மோற்சவ பெருவிழாவின் விஷேட நிகழ்வுகள்

02.12.2005 வெள்ளி - வேட்டைத் திருவிழா (மகிசிசம்காரம்)
மாலை 4 மணிக்கு விஷேட மேளக்கச்சேரியுடன் தீப்பந்த விளையாட்டு, வாள்வீச்சு, பொய்கால் குதிரை போன்ற வீரதீரச் செயல்களும் இடம்பெறும்.

04.12.2005 ஞாயிறு - தேர்த்திருவிழா
காலை 9 மணிக்கு வசந்தமண்டப பூஜையைத் தொடர்ந்து காலை 10 மணிக்கு ஐயப்பன் தேரில் ஆரோகணித்து தெருவீதி வலம் வருவார்.

05.12.2005 திங்கள் - தீர்த்தத்திருவிழா
காலை 9.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை நடைபெற்று எம்பெருமான் தீர்த்தமாடுவார். அத்துடன் கற்பூரச்சட்டி எடுத்தல் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மகேஸ்வரபூஜை இடம்பெறும்.

06.12.2005 செவ்வாய் - பூங்காவனம், திருவூஞ்சல், விசேட உற்சவம்

25.12.2005 ஞாயிறு - நெய்நிரப்புதல்

26.12.2005 திங்கள் - இருமுடி கட்டுதல் அதனைத் தொடர்ந்து 18 ஆம் படி ஏறி நெய் அபிஷேகம் இடம்பெறும். இரவு படிப்பூஜை இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து சக்தி பூஜை நடைபெறும்.

அனைவரும் வருவீர் ஐயனின் திருவடி பணிந்து அவன் அருள் பெறுவீர்.

தேவஸ்தானம் கோண்டாவில்.

ஐயப்பன் அருள் பெற வாழ்த்துவோர்:

நியூ ராகம்ஸ் பட்டுச்சாலை இல.7,8, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.	ரூபன் புத்தகசாலை 605, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.	கிருபா நகை மாளிகை 333A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 7149

(42-32-15-19) (43-400)

MW "Music World"இன்

இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி

01-12-2005 முதல்
15-12-2005 வரை

மாபெரும் மலிவு விற்பனை

MasterCard VISA

முக்கிய குறிப்பு:-
இலங்கை வங்கி, மக்கள் வங்கி, செலான் வங்கி மற்றும் கொமர்சல் வங்கி ஆகியவற்றின் கடனட்டை மூலம் (Visa, Master) பொருள்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு மேலும் 03% கழிவு வழங்கப்படும்.

- புதிய, பழைய வீடியோ சீடிக்கள்
- புதிய, பழைய, இடைக்கால ஒடியோ சீடிக்கள்
- அனைத்து வகையான MP-3 சீடிக்கள்
- தமிழ் மற்றும் ஆங்கில D.V.D கள்
- கர்நாடக சங்கீத சீடிக்கள்
- இந்து கிறிஸ்தவ பக்திப் பாடல் சீடிக்கள்
- Sof Ware, Games சீடிக்கள் .

என்பனவற்றைக் கொள்வனவு செய்வோருக்கு 05% முதல் 25% வரை விலைக்கழிவு ...!
இவற்றைவிட இக்காலப்பகுதியில் ஒளி, ஒலிப்பதிவை மேற்கொள்வோருக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Music World
பலாலி வீதி, தாபல் பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
தொலை பேசி 021 222 6554, 021 222 6542
E-mail:- itnkamesh@yahoo.com

திருகோணமலையில் படை அத்துமீறல்களை தடுத்து நிறுத்தக் கோரி ஜனாதிபதிக்கு மனு

திருகோணமலை,டிசெ.2

திருகோணமலையில் படை அத்துமீறல்களைத் தடுத்துநிறுத்தக் கோரி ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருக்கின்றது திருகோணமலை தமிழ்மக்கள் பேரவை.

பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் ஒப்பமிட்ட இதுதொடர்பாக அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்கா தேசத்தின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தங்களுக்கு எங்கள் மனம் நிறைந்த வாழ்த்துகள்.

திருகோணமலை நகரில் சட்டவிரோதமாகக் கடந்த மே மாதம் 15ஆம் திகதி நிறுவப்பட்ட புத்தர் சிலை விவகாரத்தின் பின் ஸ்ரீலங்கா அரசாங்கத் தரப்பினர் எங்களுடன் நடத்திய பலகட்டப் பேச்சுகளின் போது அமைச்சர்கள் மூவர் நேரடியாக எமக்குப் பல வாக்குறுதிகளை வழங்கினர். சட்டரீதியான முறைகளைக் கையாண்டு புத்தர் சிலையை அகற்றுவதாக அவர்கள் கூறினார்கள். ஆனால், சொல்லப்பட்டவை எவையும் நிறைவேற்றப்படாமல் காலம் இழுத்தடிக்கப்பட்டு தமிழ் மக்களுக்கு எதிராகப் பல்வேறு இராணுவ அத்துமீறல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. நாட்டின் பிரதமராகக் கடமையாற்றி வந்த தங்களுக்கு இவை எவையும் தெரியாமல் இருக்க நியாயமில்லை. இன்று திருகோணமலை நகரம் முற்றுமுழுதாக இராணுவமயப் படுத்தப்பட்டு தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கை முடக்கப்பட்டுள்ளது. பார்க்கும் இடமெல்லாம் இராணுவம் குவிக்கப்பட்டு, வீதியெங்கும் காவலரண்கள் அமைக்கப்பட்டு எமது மக்கள் உளரீதியாகத் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்ட வண்ணம் உள்ளனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முற்றுமுழுதாக மீறி புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மனித உரிமைச் சட்டம் புதைகுழியில் புதைக்கப்பட்டு அவசரகாலச்சட்டம் அரங்கேற்றப்பட்டுள்ள சூழ்நிலையில், தமிழ் மக்களின் உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு திறந்த வெளிச்சிறைக் கைதிகளாகத் தமிழ் மக்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கட்டைபறிச்சான், மஹிந்தபுர இராணுவ முகாமில் தமிழ் மக்கள் தமது அன்றாட வாழ்விற்குரிய உணவு வகையினைக் கூட எடுத்துச்செல்ல முடியாத அளவுக்கு அடாவடித்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் வீடு கட்டுவதற்குரிய கட்டடப்பொருள்களை எடுத்துச்செல்லத் தடை விதிக்கப்படுகின்றது. திருகோணமலையில் கொடுமையான யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் கூட இப்படியான கெடுபிடிகளும், அடாவடித்தனமும் இடம்பெற்றதில்லை. தமிழ் மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில் தாங்கள் இந்த இராணுவ அத்துமீறல் நடவடிக்கைகளுக்கு எதிராக ஏதாவது தீர்வைத் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் இக்கடிதத்தைத் தங்களுக்கு அனுப்புகின்றோம்.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களே!

திருகோணமலையில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இராணுவ அட்டூழியங்களை உடன் தடுத்துநிறுத்துங்கள். சிவில் நிர்வாகம் நடைபெறுவதற்கு நாம் எதிரனாவர்கள் அல்லர். எனவே, காவல் கடமையில் காவல்துறையினரை மட்டும் ஈடுபடுத்துங்கள். சகல இராணுவக் காவலரண்களையும் அகற்றி இராணுவத்தினரை முகாம்களில் இருந்து கடமையாற்ற ஏற்பாடு செய்யுங்கள். தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிக்காதீர்கள். உடனடியாகத் தாங்களே சுயமுடிவு எடுத்து திருகோணமலையில் இராணுவத்தின் அத்துமீறல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துங்கள். கடந்த 26, 27ஆம் திகதிகளில் நடைபெற்ற தமிழீழ மாவீரர் நிகழ்வின்போது அந்த நிகழ்வைக் குழப்பி இனரீதியான மோதல்களை உருவாக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கா கடற்படையினர் திட்டமிட்டு தேவையற்ற சோதனை நடவடிக்கைகளையும், கெடுபிடிகளையும் மேற்கொண்டமையைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். இது சம்பந்தமாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாகத் தாங்கள் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்கத்தவறுவீர்களாயின், தமிழ் மக்கள் மிகவிரைவில் அகிம்சை வழியில், அமைதியான முறையில், மிகப்பெரிய அளவில் இதற்கு எதிராகப் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதை மிகவும் மனவருத்தத்துடன் அறியத்தருகிறோம் - என்று உள்ளது. (க)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிப் பொருள்கள்

வலி.தென்மேற்கு,டிசெ.2

சர்வதேவ கெயர் நிறுவனம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மண் குடிசைகளில் வாழும் குடும்பங்களுக்கு உபகரணங்களை வழங்கியுள்ளது.

அத்துடன், ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைப்பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்திற்குச் சவர்க்காரம், டெற்றோல் போன்ற பொருள்களைக் கொண்ட சிறிய சுகாதார பொதி ஒன்றையும், பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுக்கு அலுமினியத்தினால் செய்யப்பட்ட வாளிகளையும் இந்த நிறுவனம் வழங்கியுள்ளது.

சண்டிலிப்பாயினுள்ள பிரதேச செயலகத்தில் வைத்து இந்த உதவிப் பொருள்கள் கடந்த இரு தினங்களாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(8-135)

பல்கலை. மாணவரிடையே ஆய்வுக்கட்டுரைப் போட்டி

ஆண்டுவிழாவையொட்டிப் புனர்வாழ்வுக்கழகம் நடத்துகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.2

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது 20ஆவது ஆண்டு நிறைவையொட்டி பல்கலைக்கழக மாணவர்களிடையே ஆய்வுக் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

''வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மனித செயற்பாட்டினதும் இயற்கையினதும் அனர்த்தங்களுக்குமான அசரசார்பற்ற நிறுவனங்களின் செயற்றிறன்'' என்ற தலைப்பில் சூழல் உள்கட்டுமானம், மீன்பிடி, விவசாயம், கால்நடை, மனிதவள அபிவிருத்தி, கைத்தொழில், கல்வி, சுகாதாரம் மற்றும் போஷாக்கு ஆகிய விடங்களை உள்ளாய்வு செய்யும் கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் அமையும் ஆய்வுக் கட்டுரையை எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் 'பீடாதிபதி, வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அல்லது 'பீடாதிபதி, வணிக கற்கைகள்பீடம், வவுனியா' என்ற முகவரிக்கு அல்லது 'இணைப்பாளர், சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம், முதன்மைச் செயலகம், கண்டி வீதி, கிளிநொச்சி' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-202)

புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியருக்கு வேறுபட்ட அளவுத் திட்டங்களில் சம்பளம்

புதிதாக நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு வேறுபட்ட அளவுத் திட்டங்களில் மாதாந்தச் சம்பளம் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பட்டதாரி ஆசிரியர்களுக்கு வடக்கு- கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கிய நியமனக் கடிதத்தில் வழங்கப்பட வேண்டிய சம்பள அளவுத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ள சம்பள அளவுத்திட்டத்தின்படி ஆரம்பத்தில் 9 ஆயிரத்து 35 ரூபா திரட்டிய சம்பளமாக வழங்கப்படவேண்டும். ஆனால், எந்தவிதமான விளக்கமும் குறிப்பிடப்படாமல் சில கல்வி வலயங்களில் திரட்டிய சம்பளமாக 8 ஆயிரத்து முந்நூற்று 45 ரூபா வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில மாவட்டங்களில் சம்பள அளவுத் திட் டத்தின்படி 9 ஆயிரத்து 35 ரூபா வழங்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. மாவட்டத்திற்கு மாவட்டம் வலயத்திற்கு வலயம் மாறுபட்ட அளவுகளில் சம்பளம் வழங்கப்படுவது தொடர்பாக மாகாணக் கல்வி அமைச்சிற்கு ஆசிரியர்கள் சுட்டிக் காட்டியுள் ளனர். (8-11)

கடும்மழை காரணமாக குடியிருப்புகள் பாதிப்புற்றோருக்கு ஒருவாரத்திற்கு உலர் உணவு.

வலி.தென்மேற்கு,டிசெ.2

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தினால் குடியிருப்புகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு வாரத்திற்கான உலர் உணவு நிவாரணத்தை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதிப்புப் பற்றி கிராம அலுவலர்கள் சமர்ப்பித்த சிபார்சுகளின் பேரில் இந்த உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

மானிப்பாய் பலநோ.கூ. சங்கம், பண்டத்தரிப்பு பலநோ.கூ. சங்கம் ஆகியவற்றின் ஊடாக இந்த உலர் உணவு நிவாரணம் இவ்வாரம் வழங்கப்படவுள்ளதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

690 குடும்பங்கள் இந்த நிவாரணத்தை பெறத்தெரிவு செய்யப்பட்டுள்ளன.(8-135)

பத்திரிகையியல் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் பத்திரிகையியல் டிப்ளோமா (முழுநேரம்) கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2004ஆம், 2005ஆம் ஆண்டுகளில் ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் சித்தியடைந்த பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களைக் கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் 'முதுநிலை உதவிப் பதிவாளர், கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் எழுத்துத் தேர்வு நடைபெறும். (8-202)

உங்களுக்கு நீங்களே தலைவன் ஆவதற்கு மனதை அடக்கப் பழகிக்கொள்ளுங்கள்

உடல் கட்டளை இட்டவாறு மனம் செயற்பட்டால் அதுவே மகத்துவம்

'மனமெனும் பெண்ணே! வாழி நீ கேளாய் ஒன்றையே பற்றி ஊசலாடுவாய்' - இது பாரதியார் கூற்று.

மனம் குரங்கு எனப்படுகின்றது. கொம்பருக்கு கொம்பர் தாவுவது குரங்குக் குணம். ஓரிடம் தனிலே நிலையாக நிற்காது மனம். ''மனஸ்'' என்ற மூலத்தைக் கொண்டுதான் மனுஷ்யன் என்ற வடமொழி வார்த்தை உருவாகிற்று. எனவே, மனதை உடையவன் மனிதன். அது அவனை ஆட்டிப்படைக்கின்றது. எனவேதான் பேயாய் உழலும் சிறு மனமே எனப் பேசப்படுகின்றது. சிறுமனம் என்பது மனத்தின் சிறுமையை, இழிவைச் சுட்டிநிற்கின்றது எனலாம்.

மாறுபட்ட உணர்வுகளே மனத்தின் லயங்கள். ஒருவன் தன்னை அறியும்படி வைப்பதும் அறியவிடாமல் தடுப்பது மனம்தான். ஒருவனுக்குக் கண்ணியத்தையும் அத்துடன் இழிநிலையையும் உண்டுபண்ணுவது மனம். ஆணவத்தையும் அறிவையும் உண்டு பண்ணுவது மனம். பணிவையும் படாடோபத்தையும் உண்டுபண்ணுவது மனம். எனவே, தன்னை அறிய முற்படும் மனிதன் முதலில் செல்ல வேண்டிய பெரிய உதிரி மனதுதான். ஒவ்வொருவரும் தன்னை அறிவதற்குத் தனது மனத்தை அறியவேண்டும். மனத்தை அறிந்து கொண்டவன்தான் உலகை வெல்லமுடியும். எதையும் வெல்லமுடியும். தன்னை அறிந்தவனுக்குக் கேடில்லை. இதனைத் திருமூலர் திருமந்திரத்தில் சொன்னார்.

தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமற் தானே கெடுகின்றான்
தன்னையே அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்தானே

தன்னை அறியும் ஒருவன் பிறர் அர்ச்சிக்கும்படி ஆகிவிடுகின்றான். எமது மனம் எதை விரும்புகின்றதோ அதிலேதான் அது லயிக்கின்றது. இதனை ''காதி விளையாடி இருகை வீசி வந்தாலும் தாதி மனம் நீர்க்குடத்தேதான்'' என்று பட்டணத்தார் பகர்ந்துள்ளார்.

மனிதன் நல்லவனாக மாறுவதற்கு மனத்தைப் பக்குவப்படுத்தவேண்டும். பாடம் செய்யவேண்டும். தனது சிறுமைகளை எண்ணும்போது தன்னை உணரும் தன்மை ஏற்படும்போது அது ஒரு லயமாக, ராகமாக, ஒரு சுருதியாக, ஒரு பாவமாக நம் மனத்துள்ளே எழுந்து விடுகின்றது. மனிதன் தன்னை உணரும் நிலையில் மனம் பாடமாகிவிடுகின்றது. மனம் பாடமாகிவிட் டால் பற்றற்ற ஒரு நிலை ஏற்பட்டுவிடுகின் றது. பல பேர் கூடி நம்மீது குற்றஞ்சாட்டி னாலும் சிரிப்புவரும். அநேகர் கூடி நமக்குப் புகழாரம் சூட்டினாலும் நமக்கு உடல் புல்லரிக்காது. புகழ்ச்சியால் மமதையும் இகழ்ச்சியால் கவலையும் ஏற்படாத நிலையே பக்குவ நிலை.

மனத்தின் அழுக்கு அற்றுப் போகும் நிலைதான் பக்குவ நிலை. எதிலும் ஆசை வைக்கின்றவன் காட்டிற்கு ஓடினாலும் அவனை ஆசைகள் சுற்றிக்கொண்டே இருக்கும்.

மனத்தழுக் கறாத மவுன ஞான யோகிகள்
வனத்தகத் திருக்கினும் மனத்தகத்
மனத்தகந் தழுக்கறுத்த மவுனஞான
- யோகிகள்
முலைத்தடத் திருக்கினும் பிறப்பறுந்
- திருப்பரே!

மனம் பக்குவப்பட்டுவிட்டால் ஒருவன் காட்டிற்குப் போகவேண்டியதில்லை என்பது சிவவாக்கியர் கருத்து.

பரமேஸ்வரி சிவராமலிங்கம்

சாப்பாட்டைக் காணும்போது பசி எடுக்காதவன், பெண்ணைக் காணும்போது இச்சைகொள்ளாதவன், பணத்தைக் காணும்போது ஆசை கொள்ளாதவன், அடுத்தவரிலும் பார்க்க பெரியவீடு வாங்கவேண்டும் என்ற விரும்பமில்லாதவன் மனத்தை அடக்கியவனாவான்.

மனத்தை அடக்குங்கள், அடக்குங்கள் என்றுதான் ஞானியர் சொல்கின்றனர். ஆனால், லௌகீக வாழ்க்கையில் உழலும் மனிதர்களால் இது முடியக்கூடிய ஒன்றல்ல. சாதாரண மக்கள் மனதிற்குக் கட்டுப்பட்டவர்களாகவே காணப்படுகிறார்கள். இதனால் தான் உலகில் அமைதி இன்மை நிலவுகின்றது. மனத்தை அடக்கப் பழகியவர் ஒருசிலரேயாவர். அவர்கள் ஞானியர்கள், யோகியர்கள், சித்தர்கள், முத்தர்கள் எனப்படுகின்றனர். அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு.

மக்கள் மனதை அடக்கப் பழகிவிட்டால் உலகில் போரும் அழிவும் ஏற்படாது. மனதிற்கு உடல் அடங்காமல் உடல் கட்டளை இட்டபடி மனது செயற்பட்டால் மகத்துவம் ஏற்படும். தனக்குத்தானே தலைவன் ஆவதற்கு மனத்தை அடக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற - வள்ளுவர் கருத்து.

மாசற்ற மனமே இறைவனது இல்லம்.

பிரியாவிடை, வீடுவழங்கல் இதுவரை இல்லை ஹொரகொல்லைக்குப் புறப்படுகின்றார் சந்திரிகா

கொழும்பு, டிச.2

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஹொரகொல்லவில் உள்ள தனது பரம்பரை வீட்டிற்கே செல்லவுள்ளார். உத்தியோகபூர்வ பிரியாவிடை வைபவங்கள் எதுவுமின்றி தன்னந்தனியாகவே அவர் ஹொரகொல்ல வுக்குச் செல்லத் தயாராகிவிட்டார்.

வழமையாகப் பதவி விலகும் ஜனாதி பதிக்கு பிரியாவிடை வைபவமும், புதிதா கப் பதவியேற்கும் ஜனாதிபதிக்கு வரவேற்பு வைபவமும் ஒரே தினத்தில் நடத்தப்படுவது தான் வழமையும் சம்பிரதாயமும்.

இந்த வைபவத்தை முறையாக நடத்துவ திலும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதி லும் புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காட்டிய அசமந்தப்போக்கே முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க திடீரென கிளம்பு வதற்குக் காரணம் எனவும் கூறப்படுகின்றது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் விஜயராமயில் குடியி ருந்த வீடே முன்னாள் ஜனாதிபதிக்கும் ஒதுக்கப்பட்டது.

நவம்பர் 12ஆம் திகதிக்கு முன் இந்த வீட்டைக் காலி செய்து கொடுக்கும்படி கதிர் காமரின் விதவை மனைவி சுகந்திக்கு ஏற் கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அவர் அந்த வீட்டைக் காலி செய்வதற்கு மேலும் சில தினங்கள் அவகா சம் கேட்டுள்ளாராம்.

அதன்பின் அவ்வீட்டை மறுசீரமைத்து வழங் குவதற்கே மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாம்.

இதனாலேயே முன்னாள் ஜனாதிபதி ஹொரகொல்லயில் உள்ள தமது பரம்பரை வீட்டிற்கே செல்லத் தீர்மானித்துள்ளார் என வும் தெரியவந்துள்ளது.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதிக்கு பிரியாவிடை வைபவம் நடத்துவதில் சில சிக்கல்களும் ஏற்பட்டுள்ளதாம். கூறப்படும் காரணங்களில் ஒன்று இராணுவ மரியாதை அணிவகுப்பை நடத்தும் இராணுவ விளை யாட்டரங்கில் நீர் நிறைந்துள்ளது என்பது.

ஆனால், இராணுவத்தரப்பில் மற்றும் ஒரு விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாம்.

அதாவது பதவி ஏற்பவருக்கும் பதவி விலகுபவருக்கும் ஏக காலத்தில் வர வேற் பும் பிரியாவிடையும் வழங்கும்போது 21 மரியாதை வேட்டுகள் தீர்க்கப்படலாம். ஆனால், தனிப்பட்ட முறையில் முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு இவ்வாறு மரியாதை வேட்டுகளைத் தீர்ப்பது வழமையில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் முடிந்தவுடன் 19ஆம் திகதியே பதவி ஏற்றுக் கொண்டார். அன்றைய தினமே அவருக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையும் 21 பீரங்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன. இத னால், மீண்டும் தனிப்பட்ட முறையில் அணி வகுப்பை நடத்துவதும் 21 மரியாதை வேட்டு களைத் தீர்ப்பதும் சாத்தியப்படாது என கருத்துத் தெரிவித்துள்ளனராம்.

இக்காரணங்களினாலேயே முன்னாள் ஜனாதிபதிக்கு உத்தியோக பூர்வ பிரியாவிடை வைபவத்தை நடத்துவதில் புதிய ஜனாதிபதி அசட்டையாக இருக்கின்றார் எனத் தகவ லறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் முதல் பிரஜையாக 11 வருடங்கள் ஆட்சி செலுத்திய முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்க ஒரு சாதாரண பிரஜை யாக மனமுடைந்த நிலையிலேயே தமது பரம்பரை வீட்டிற்குச் செல்கிறார் எனவும் கவலை தெரிவிக்கின்றனர் சந்திரிகா குமார துங்கவின் ஆதரவாளர்கள். (க-02)

பாணந்துறையில் தொழிற்சாலை எரிந்து நாசமானது

பாணந்துறை கைத்தொழில்பேட்டையில் அமைந்துள்ள இறப்பர் தொழிற்சாலை ஒன் றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட திடீர் தீ விபத் தில் சுமார் ஒரு கோடி ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தீ விபத் தில் இறப்பர் மற்றும் இரசாயனப் பொருள் களே தீப்பற்றி எரிந்தன. எனினும், மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே தீயைத் தாங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும்- தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர்.

மேற்படி தீச்சம்பவத்துக்கான காரணம் என்னவென்று இதுவரை தெரியவில்லை என்றும், இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் பாணந்துறைப் பொலீஸார் தெரிவித்தனர். (க-8)

போலி டாக்டர் பொலீஸ் வலையில்!

குற்றப்புலனாய்வுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட போலி டாக்டரொரு வரை எதிர்வரும் ஆறாம் திகதி விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் குசலா சரோஜினி வீரவர்தன நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

மேற்படி போலி டாக்டர் யக்கல பகுதி யில் வைத்து குற்றப்புலனாய்வுப் பொலீ ஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார். எஸ்.ஏ.பிரேமரட்ன சுலசிங்க என்ற இந்த நபர் நான்கு லட்சம் ரூபாவைக் கோரி வங்கிக் கடனுக்கு விண்ணப்பித்திருந்தபோது இந்த விவகாரம் அம்பலமானது.

குறிப்பிட்ட வங்கி இந்த நபரின் அடை யாள அட்டையை ஆட்பதிவுத் திணைக் களத்தில் பரீட்சித்தபோது அதில் மாறாட்டம் செய்துள்ளமை கண்டறியப்பட்டது. இதனை யடுத்து இரகசியப் பொலீஸாரிடம் செய்த முறைப்பாட்டையடுத்து இவர் கைது செய் யப்பட்டார். (க-8)

தினைக்களப் பணிப்பாளர் நையப்புடைக்கப்பட்டார்!

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி பி. சமரநாயக்க நேற்று முன்தினம் அவரது அலுவலகத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

மாளிகாவத்தையிலுள்ள மீன்பிடித்துறை, நீரியல் வளத்துறை அமைச்சில் இந்தச் சம்ப வம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் பொதுமக்கள் சேவை தினமென்பதால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள்ளே நுழைந்த நான்கு பேர் நான்காம் மாடியிலுள்ள மேற்படி பணிப்பாள ரின் அலுவலகத்திற்குச் சென்று தாக்குதலை நடத்தியிருக்கின்றனர்.

கரையோரப் பகுதியில் கட்டடமொன்றை அமைப்பதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப் பித்திருந்த டாக்டரொருவரே நான்கு பேருடன் வந்து இவ்வாறு தம்மைத் தாக்கினார் எனக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப் பாளர் சமரநாயக்க நேற்று முன்தினம் மாலை தேசிய வைத்தியசாலையிலிருந்து தொலை பேசியூடாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடி விசா ரணைகளை ஆரம்பித்த மாளிகாவத்தை பொலீ ஸார் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்துள்ளனர். (க-8)

அரச கொள்கைப் பிரகடனம் மீது நாடாளுமன்றில் புதனன்று விவாதம்

கொழும்பு,டிசெ.2

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கைப் பிரகடனம் மீதான விவாதம் எதிர்வரும் ஏழாம் திகதி நாடாளுமன்றத் தில் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய கொள்கைப் பிர கடன உரை மீதான இந்த விவாதத்தை ஒத்தி வைப்புவேளை பிரேரணை விவாதமாக நடத்த கட்சி தலைவர்களின் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை, கொள்கைப் பிரகடனம் தொடர்பிலான விவாதத்தின்போது வாக் கெடுப்பு நடத்தவேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்கு முகம்கொடுப்பதற்காக அன்றைய நாளில் அனைத்து அரசாங்க ஆதரவு நாடாளு மன்ற உறுப்பினர்களையும் சமுகமளிக்கு மாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இதனால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் தங்களின் வெளிநாட்டுப் பயணங்களை ரத்துச் செய்துள்ளனர். வர்த்தக மற்றும் நெடுஞ் சாலைகள் அபிவிருத்தி அமைச்சரும், அர சாங்கத்தின் பிரதான அமைப்பாளருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் ஆலோசனையின் பேரில் பிரதான அமைப் பாளர் அலுவலகத்திலிருந்து அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இது தொடர்பான அறிவிப்பு அனுப்பப்பட்டுள் ளது. அரசாங்கத்தின் கொள்கைப்பிரகடனம் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக் கப்பட்டால் அரசு கலைக்கப்படும் என அர சமைப்புச் சட்டத்தில் தெரிவிக் கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

திருமலையில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, கேணியடி பிரதேசத்தில், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நிவாரணங்கள் உரிய முறையில் வழங் கப்படவில்லை எனத் தெரிவித்து நேற்று முன்தினம் நிலாவெளி பிரதான வீதியில் ஆர்ப் பாட்ட மொன்றில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாகத் திரு கோணமலை - நிலாவெளி பகுதிகளுக்கிடை யிலான போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(க-8)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட 628 பாடசாலைகள் புனருத்தாரணம்

விசேட திட்டம் செயற்பாடு

அம்பலாந்தோட்டை,டிசெ.2

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப் பிற்கு உள்ளான பாடசாலைகளையும் மற்றும் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியிருக்கும் பாடசாலைகளையும் புனருத்தாரணம் செய்வ தற்கும் விசேட திட்டமொன்று அரசாங்கத்தி னால் வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவி யோடு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் வடக்கு- கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் உள்ள 628 பாடசாலை கள் புனருத்தாரணம் செய்யப்படவுள்ளன.

இவற்றில் 182 பாடசாலைகள்பேரலை அனர்த்தத்தினால் முற்றாகச் சேதமடைந்தவை. ஏனைய 446 பாடசாலைகளும் இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிகமாகத் தங்கியிருந்தவையா கும்.

கரையோரப் பிரதேசங்களில் இருந்து தற்பொழுது முற்றாகச் சேதமடைந்துள்ள பாடசாலைகள் மீளவும் நிர்மாணிக்கப்பட வுள்ளதோடு அப்பாடசாலைகளுக்குத் தேவை யான பாடசாலை உபகரணங்கள் மற்றும் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் என்பனவும் இத்திட்டத்தினூடாக பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இவற்றிற்கு மேலதிகமாகப் பாடசாலை யின் தேவையைப்பொறுத்து மேலதிக கட்ட டங்கள், நூல் நிலையங்கள், ஆசிரியர், அதி பர் விடுதிகள் மற்றும் விளையாட்டு மைதா னம் உட்பட ஒரு பாடசாலைக்குத் தேவை யான அனைத்தையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பாடசாலைகளில் கட்டடங்கள் சேதமடைந் திருந்தால், அவற்றைத் திருத்தி, உடைந்து போன நிலையிலுள்ள மேசை கதிரைகளுக் குப் பதிலாக புதிய மேசை, கதிரைகளை வழங்குதல் பாடசாலைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கி பாதிப் பிற்குள்ளான மாணவர்களுக்குத் தடையின்றி கல்வியைப் பெற்றுக்கொடுக்க இத்திட்டத் தினூடாகத் திட்டமிடப்பட்டுள்ளது.(ம-187)

ஞானக்கோன் ஆள்கொணர்வு மனு; எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை

கொழும்பு,டிசெ.2

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலைவழக்கின் முக் கிய சந்தேக நபரான சார்ள்ஸ் ஞானக்கோன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவின் பிரதிவாதிகள் எதிர்வரும் ஐந்தாம் திகதி மன்றில் ஆஜராகவேண்டுமென மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்யப் பட்ட மேற்படி ஆட்கொணர்வு மனு நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதி யரசர்களான எஸ்.ஐ.இமாம், ரஞ்சித் சில்வா ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப் பட்டது.

மனுதாரரான-ஆஸ்திரேலிய பிரஜையான டெனியன் ஜே.ஸ்மித் சார்பில் சட்டத்தரணி கௌரிசங்கரி தவராசாவின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிஸ் முஸ்தபா நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜரானார்.

அமைச்சர் கதிர்காமரின் கொலை தொடர் பில் தொழிலதிபர் ஞானக்கோன் எந்தவித காரணங்களுமின்றி கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார் எனவும், நீதி மன்றம் இதனை ஆராய்ந்து அவரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் சட்டத்தரணி பாரிஸ் முஸ்தபா மன்றில் தெரி வித்தார்.

இதனையடுத்தே ஆட்கொணர்வு மனுவின் பிரதிவாதிகளை ஐந்தாம் திகதி மன்றில் ஆஜ ராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தர விட்டது.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள சார்ள்ஸ் ஞானக்கோன், சட்டமா அதிபர், மற் றும் கொழும்பு குற்றத்தடுப்புப் பணிப்பாளர் ஆகியோர் மேற்படி ஆட்கொணர்வு மனு வில் பிரதிவாதிகளா கக் குறிப்பிடப்பட் டுள்ளனர். (க-8)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம் (off Stanly Rd.)
021-2228250, 777 222422

அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

80% Off

03-12-2005 க்கு முன் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
Batch III :- 02/12/2005 - 09.30-11.30
Batch IV :- 03/12/2005 - 11.30-12.30
Batch V :- 04/12/2005 - 02.00-03.00

Diploma in Computerized Accounting
Accpac+Quick Books Pro+MYOB
வகுப்புக்கள் ஆரம்பம்:-
03/12/2005 } 2.00
04/12/2005 } pm
Tally Accounting Package - 01.00 pm

COMPUTER EXPRESS
Institute of Information Technology

Vacancies for Doctors
Co - operative Hospital Society Ltd., Moolai

Applications are invited for the posts of full time Consultant Physician, Obstrician and Gynecologist and Eye Surgeon with apporpriate qualifications and experience to undertake full responsibility in patient care and to advise the Board of Management on the day to day developmental needs on clinical matters. The Hospital is now undergoing rapid development to serve the local patient community.

Free accommodation, minimum gross salary of Rs.40,000/- per month with Bonus for performance which could be negotiated.
Applications should reach on or before 15 th December 2005.
Enquiries Could be made with

The Administrative Officer,
Co-operative Hospital, Moolai,
Chulipuram, Srilanka.
Contact Tel:- 021 222 6474 Fax:- 0602212533

(43453) **The Board of Management**

ITDG - OOTRU Partnership Programme
Vacancy

COMMUNICATION OFFICER
Responsible for information and communication functions of the Jaffna District office.
Tasks will include:
- Ensuring information Sharing with different audiences
- Synthesizing and documenting project experience
- Generating communication material (e.g. reports, brochures, news paper articles, workshops, presentations)
- Co-ordinating with media

Essential skills:
- Excellent writing skills in English and Tamil
- Excellent word processing skills
- Ability to organize workshops/ discussions etc.
- Ability to communicate clearly to various audiences

A degree in the relevant field or equivalent is required

A comprehensive salary commensurate with qualifications and experience is on offer for this position.

Please apply within 10 days of this advertisement with your C.V. Only short listed applicants will be notified.

Director
Ootru Organisation
40 Temple Road
Jaffna.

Telephone: 021- 2223665
E-mail: cngosj@sltnet.com

நவம்பர் 17 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் கடந்த 23 வருடங்களில் ஐந்து ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இவ்வாறான ஜனாதிபதித் தேர்தல்களில் அடுத்தடுத்து வெற்றி பெற்று இரு பதவிக் காலங்களில் பணியாற்றியவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மட்டுமே. ஜே.ஆர். ஜயவர்த்தன ஜனாதிபதியாக இருமுறைகள் பதவி வகித்த போதிலும் அவர் ஒருமுறை நாடாளுமன்றத்தாலும் ஒரு முறை தேர்தல் மூலமும் ஜனாதிபதியானவர். 1977 பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றுப் பிரதமரான ஜே.ஆர். புதிய அரசமைப்பை உருவாக்கி அதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட நிறைவேற்று ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தால் தெரிவு செய்யப்பட்டார். 1978 பெப்ரவரி 4 ஆம் திகதியன்று பதவிப் பிரமாணத்தை மேற்கொண்டார்.

அரசமைப்பின்படி ஆறு ஆண்டு காலத்திற்கு ஜே.ஆர். அந்தப் பதவியில் இருந்திருக்கலாம். ஆனால், அவரது பதவிக்காலம் முடிவடைய இரண்டு வருடங்கள் அதாவது 1982 இல் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது என ஜே.ஆர். தீர்மானித்தார். அவ்வேளையில் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக சிறிமாவோ பண்டாரநாயக்க இருந்தார். ஜனாதிபதி ஆணைக்குழுவால் அவரது குடியுரிமை 7 ஆண்டுகள் பறிக்கப்பட்டதால் அக்கட்சி பலவீனமான தலைமையைக் கொண்டிருந்தது.

அநுரா பண்டாரநாயக்க மற்றும் மைத்திரிபால சேனநாயக்க தலைமையிலான குழுவினர் சுதந்திரக் கட்சியினதும் அதன் தலைமையகத்தினதும் நிர்வாகத்தைக் கைப்பற்றினர். விஜயகுமாரதுங்க, சந்திரிகா குமாரதுங்க, ரி.பி. இலங்கரத்ன குழுவினர் சுதந்திரக் கட்சியின் மற்றொரு தலைமையகத்தை பொறளையில் கம்பெல் பிளேஸில் உள்ள கட்டடம் ஒன்றில் நடத்தி வந்தனர். இவ்வாறு சுதந்திரக்கட்சி உடைந்து சிதறியிருந்த வேளையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அதில் தான் வெற்றி பெறலாம் என ஜே.ஆர். சிந்தித்தார். எனவேதான், தனது பதவிக்காலம் முடிவடைய மேலும் 2 ஆண்டுகள் இருந்தவேளையில் ஜே.ஆர். ஜனாதிபதித் தேர்தலை 1982 இல் நடத்தினார்.

இருப்பினும், விஜயகுமாரதுங்க, சந்திரிகா மற்றும் ரி.பி. இலங்கரத்ன குழுவினர் ஜனாதிபதித் தேர்தலில் தமது அணி சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது எனத் தீர்மானித்தனர். அதன்படி சுதந்திரக் கட்சி சார்பில் ஹெக்டர் கொப்பேக்கடுவ ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

இதற்கிடையில், இடதுசாரிகளின் பொதுவேட்பாளர் தானே எனக்கூறி லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா தேர்தலில் குதித்தார்.

1982 ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே. கட்சி சார்பில் ஜே.ஆர்.ஜயவர்த்தன, சுதந்திரக் கட்சி சார்பில் ஹெக்டர் கொப்பேக்கடுவ, லங்கா சமசமாஜக் கட்சி சார்பில் கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, புதிய சமசமாஜக் கட்சி சார்பில் வாசுதேவ நாணயக்கார தமிழ்க் காங்கிரஸ் சார்பில் குமார் பொன்னம்பலம் மற்றும் ஜே.வி.பி. சார்பில் றோஹண விஜேயவீரஆகியோர் போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தலில் ஜே.ஆருக்கு அரசின் அனைத்து உதவிகளும் கிடைத்தன. ஹெக்டர் கொப்பேக்கடுவவுக்கு விஜயகுமாரதுங்க குழுவினரின் ஆதரவு மட்டுமே கிடைத்தது. சகல ஊடகங்களும் ஜே.ஆரை ஆதரித்தன. ஹெக்டர் கொப்பேக்கடுவவை 'அத்த' மற்றும் 'தினகர' பத்திரிகைகள் மட்டுமே ஆதரித்தன. இதற்கிடையில் தேர்தல் நெருங்கியவேளையில் கொப்பேக்கடுவவின் சில தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அநுரா பண்டாரநாயக்க பங்கு பற்றினார். கொப்பேக்கடுவ தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதியானால் தனது தாயான சிறிமாவின் பறிக்கப்பட்ட குடியுரிமையை மீள அளித்து சிறிமாவுக்கு ஜனாதிபதிப் பதவி வழங்குவார் என அநுரா தெரிவித்தார். ஒப்பந்த அடிப்படையிலேயே சுதந்திரக் கட்சி சார்பில் கொப்பேக்கடுவ நிறுத்தப்பட்டுள்ளார் என அநுரா பேசி வந்தார்.

அநுராவின் இந்தப் பேச்சுக் குறித்து ஊடகங்கள் எள்ளி நகையாடின. நாடெங்கும் அது குறித்து மீண்டும் மீண்டும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக கொப்பேக்கடுவவின் தேர்தல் பிரசாரப் பணிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமை பறிக்கப்பட்டதால் அவர் தலைமை தாங்கும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது சட்டப்படி செல்லது எனவும் அதன்படி கொப்பேக்கடுவ தேர்தலில் வெற்றி பெற்றாலும் அவர் ஜனாதிபதியாக வர வாய்ப்பில்லையெனவும் கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா முன்வைத்த வாதமானது கொப்பேக்கடுவவின் வெற்றி வாய்ப்பை மேலும் பாதித்தது.

இக்காரணங்களால் 1982 ஒக்ரோபர் 20 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர். 34 லட்சத்து 50 ஆயிரத்து 811 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார். அவர் பெற்ற மேலதிக வாக்குகள் 9 லட்சத்து 2ஆயிரத்து 373 வாக்குகள் ஆகும். ஹெக்டர் கொப்பேக்கடுவ பெற்ற வாக்குகள் 25 லட்சத்து 48 ஆயிரத்து 438 ஆகும். விஜயவீர பெற்ற வாக்குகள் 2 லட்சத்து 73 ஆயிரத்து 428 ஆகும்.

* * *

சிறிலங்காவின் இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் 1988 நவம்பர் 18 ஆம் திகதி நடைபெற்றது. இந்தத் தேர்தலில் ஐ.தே. கட்சி சார்பில் ரணசிங்க பிரேமதாஸ, சுதந்திரக் கட்சி சார்பில் சிறிமாவோ பண்டாரநாயக்க, ஐக்கிய சோலிஷ கட்சி சார்பில் ஓசி அபேகுணசேகர ஆகியோர் போட்டியிட்டினர்.

அவ்வேளையில் நாட்டில் வன்முறை தலைவிரித்தாடியது. வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளும் நாட்டின் ஏனைய பாகங்களில் ஜே.வி.பி. யினரும் வன்முறைகளில் ஈடுபட்டதால் தேர்தல் நடவடிக்கைகளை சுதந்திரமாக நடத்தமுடியவில்லை. தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி ஜே.வி.பி. அறிவித்திருந்தது. வாக்குச் சீட்டுகளை அபகரிப்பது, மக்களைப் பீதிக்குள்ளாக்குவது, அரச திணைக்களங்களின் செயற்பாடுகளை முடக்குவது, போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவது போன்ற ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளால் நாட்டில் பதற்றநிலை ஏற்பட்டது.

தேர்தலில் போட்டியிட்ட கட்சியினர் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர். கூட்டங்கள் குழப்பப்பட்டன. நாட்டில் 7 மாகாண சபைகளின் நிர்வாகம் அரசின் கைகளில் இருந்த காரணத்தாலும் பாதுகாப்புப் படைகளின் ஒத்துழைப்புக் கிடைத்த காரணத்தாலும் ஐ.தே. கட்சியால் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட முடிந்தது. ஊடகங்களின் ஆதரவும் பிரேமதாசவுக்குக் கிடைத்தது. இவ்வாறான வசதிகள் இல்லாத காரணத்தால் ஏனைய இரு வேட்பாளர்களாலும் உரிய முறையில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட முடியவில்லை.

தேர்தல் கடமைகளில் ஈடுபட வேண்டாம் என அரச ஊழியர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடப்பட்டன. இதனால், குருணாகல் மற்றும் மொனராகல பிரதேசங்களின் உதவித் தேர்தல் ஆணையாளரால் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை உருவானது. நிலைமை இவ்வாறு இருந்த காரணத்தால் மொனராகல மாவட்டத்தில் 49 வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவு ரத்துச் செய்யப்பட்டது.

தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு தேசப் பிரேமி அமைப்பினர் மக்களைக் கேட்ட காரணத்தால் மிகவும் குறைந்த அளவிலேயே வாக்களிப்பு இடம்பெற்றது. இதன் காரணமாக 13 மாவட்டங்களில் 207 வாக்களிப்பு நிலையங்களில் ஒரு வாக்காளர் கூட வாக்களிக்கவில்லை. '50 இற்கும் மேற்பட்ட வாக்களிப்பு நிலையங்கள் மீது கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. வீதிகளில் மரங்கள் தறித்து வீழ்த்தப்பட்டு போக்குவரத்திற்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. குண்டு வீச்சுச் சம்பவங்கள் குறித்து சகல மாவட்டங்களில் இருந்தும் அறிக்கைகள் கிடைத்தன'. 1988 ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் நடத்தப்பட்ட தேர்தலில் ஐ.தே. கட்சி வேட்பாளர் ரணசிங்க பிரேமதாஸ 25 லட்சத்து 69 ஆயிரத்து 199 வாக்குகளைப் பெற்று (50.45) சதவீதம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சிறிமா 22 லட்சத்து 89 ஆயிரத்து 868 வாக்குகளையும், ஓசி அபேகுணசேகர 2 லட்சத்து 35 ஆயிரத்து 719 வாக்குகளையும் பெற்றனர். மொனராகல உட்பட பல பகுதிகளில் வாக்களிப்பு நடைபெற்றிருந்தால் இந்த முடிவுகளில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இருந்திருக்கும்.

* * *

சிறிலங்காவின் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் 1994 நவம்பர் 9 ஆம் திகதி நடைபெற்றது. இந்தத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் சந்திரிகா குமாரதுங்கவும் ஐ.தே. கட்சி சார்பில் காமினி திசாநாயக்கவும் ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி சார்பில் நிஹால் கலப்பதியும், பூமி புத்திரக் கட்சி சார்பில் ஹரிச்சந்திர விஜேதுங்கவும், சுயேட்சை வேட்பாளர்களாக ஏ.ஜே. ரணசிங்க மற்றும் ஹட்சன் சமரசிங்க ஆகியோரும் போட்டியிட்டனர்.

இருப்பினும், 1994 ஒக்ரோபர் 24 ஆம் திகதி கொழும்பு பாலத்துறையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்க கொல்லப்பட்டார். அவரது வெற்றிடத்துக்கு ஐ.தே. கட்சி காமினி திசாநாயக்கவின் மனைவியான ஸ்ரீமா திசாநாயக்கவை வேட்பாளராக நிறுத்தியது.

ரணில் விக்கிரமசிங்க உட்பட ஐ.தே. கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் பலர் ஸ்ரீமா திசாநாயக்கவுக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்தனர். தாம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படின், 1995 ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்து விடுவதாக சந்திரிகா வழங்கிய வாக்குறுதிக்கு அமைய முற்போக்கு முன்னணி அபேட்சகராகத் தாம் நிறுத்தியிருந்த நிஹால் கலப்பதியை ஜே.வி.பி போட்டியினின்றும் விலக்கிக்கொண்டது. இப்பின்னணியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 47 லட்சத்து 9 ஆயிரத்து இருநூற்றைந்து வாக்குகளைப் பெற்று மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளின் 62.28 வீகிதமான வாக்குகள் பெற்ற சந்திரிகா பெருவெற்றியீட்டினார். இத்தேர்தலில் ஐ.தே. கட்சி சார்பான வேட்பாளராகப் போட்டியிட்ட ஸ்ரீமா திசாநாயக்க பெற்ற வாக்குகள் 27 லட்சத்து 15 ஆயிரத்து 283 ஆகும். இது மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளின் 35.91 விகிதமாகும். இதுவரை காலமும் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்ட பிரதான கட்சியின் வேட்பாளர் பெற்ற ஆகக் குறைந்த தொகையான வாக்குகள் இதுவே.

* * *

நாட்டின் நான்காவது நிறைவேற்று ஜனாதிபதித் தேர்தல் 1999 டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்றது. அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா, ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் மற்றும் ஜே.வி.பி. அபேட்சகரான நந்தன குணதிலக உட்பட 13 வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

ஐ.தே. கட்சி விடுதலைப்புலிகள் அமைப்புடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதாகக் கூறி பொ. ஐ.முன்னணி பெருமெடுப்பில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இதனிடையே டிசெம்பர் 18 ஆம் திகதியன்று, கொழும்பு நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற கடைசித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிவிட்டு மேடையை விட்டிறங்கி மோட்டார் வண்டியில் ஜனாதிபதி சந்திரிகா ஏறமுயன்றவேளை பெண்ணொருத்தரால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலில் சிக்கி அவர் காயமடைய நேர்ந்தது மட்டுமன்றி, வேறு சிலர் உயிரிழக்கவும் நேர்ந்தது.

இச்சம்பவம் காரணமாக சந்திரிகாவுக்கு பெரும் அனுதாப அலை உருவாயிற்று. இது தேர்தல் முடிவுகளில் கூட கடும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இத்தகைய பின்னணியில் டிசெம்பர் 21 ஆம் திகதிஇடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பில் 43 லட்சத்து 12 ஆயிரத்து 157 வாக்குகளைப் பெற்று

தமிழில்: வியெஸ்ரி

இரண்டாவது தடவையும் இலங்கையின் ஜனாதிபதியாக சந்திரிகா தெரிவானார். மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 51.12 சதவீத வாக்குகளை சந்திரிகா பெறமுடிந்தது. அதே சமயம், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐ.தே.கட்சி சார்பான ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க 36 லட்சத்து 2 ஆயிரத்து 748 வாக்குகளையும், ஜே.வி.பி அபேட்சகர் நந்தன குணதிலக 3 லட்சத்து 44 ஆயிரத்து 173 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

தமது முன்னைய ஜனாதிபதிப் பதவிக்காலம் முடிவடைவதற்கு மேலும் ஓராண்டு கால அவகாசம் இருந்த நிலையில் சந்திரிகா தமது இரண்டாவது ஜனாதிபதிப் பதவிக்கான பிரகடனத்தை 1999 டிசெம்பர் 22 ஆம் திகதியன்று மேற்கொண்டிருந்தார்.

இதன் காரணமாகவே 2006 ஆம் ஆண்டு முடிவில் இடம்பெற வேண்டியிருந்த ஜனாதிபதித் தேர்தலை இவ்வாண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி நடத்தவேண்டி ஏற்பட்டது. *

சிங்களம் மூலம்: தயா லங்காபுர

World Vision

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகள் அமைத்தலுக்கான ஒப்பந்தகாரர்களுடனான சந்திப்பு

வேள்ட் விஷன் நிறுவனமானது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் 500 தொடக்கம் 580 சதுர அடி பரப்பளவைக் கொண்ட புதிய வீடுகளை நிர்மாணிக்க இருக்கின்றது.

ஆகவே மேற்குறிப்பிட்ட வீடுகளை அமைப் பதற்கான ஒப்பந்தகாரர்கள் கட்டடத் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுவதற்காகத் தாங்கள் எதிர்வரும் மார்கழி மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திக்திவரையான காலப்பகுதியில் கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

வேள்ட் விஷன் லங்கா

நெடுங்கேணி வீதி,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.

முக்கிய குறிப்பு: ஒப்பந்தகாரர்கள் சுயவிபரக் கோவையையும் தேசிய அடையாள அட்டையினையும் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள். [சி/46467]

14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1931 02 25

மறைவு 1991 12 06

அமரர் மாதுங்கர் அமிர்தலிங்கம்

புங்குடுதீவு- 10

திதி: 02.12.2005 பிரதமை

பண்பின் இருப்பிடமே பாசத்தின் உறைவிடமே- ஆண்டு பதினான்கு சென்றாலும் ஆறாது எங்கள் துயர்- நீங்கள் என்றென்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கின்றீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

16, கடைச்சாமி லேன்,
யாழ்ப்பாணம். (43341)(51)

பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்குப் புதிய திட்டம் மொத்தம் 204 தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.2

நாடளாவிய ரீதியில் 204 பாடசாலைகள் உயர்தர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முன்னெடுத்துச் செல்லப்படவுள்ளன.

கல்வி அமைச்சின் செயலாளர் இதற்கான நடவடிக்கையினை எடுத்துள்ளார்.

முதற்கட்டமாக 104 தேசிய பாடசாலைகளும், 100 நவோதயா பாடசாலைகளும் உயர்தர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அபிவிருத்திசெய்ய நிதி உதவி கிடைத்துள்ளது.

இதில் 157 சிங்களமொழி மூலமான பாடசாலைகளும், 47 தமிழ்மொழிமூலமான பாடசாலைகளும் தெரிவாகியுள்ளன.

வடக்கு- கிழக்கில் மட்டும் 5 தேசிய பாடசாலைகளும் 20 நவோதய பாடசாலைகளும் தெரிவாகியுள்ளன.

உயர்தர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாடசாலை சுற்றுப்புறஅபிவிருத்தி, அழகுபடுத்தல், குடிதண்ணீர் வசதி, பெயர்ப் பலகை அமைத்தல், சுற்றுமதில் அமைத்தல், மலசல கூடம், மைதானம், கணனி, தொலைபேசி வசதி அளித்தல் போன்றவை நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

(202- 185)

நடமாடும் சட்ட உதவிகள் சேவை

யாழ்ப்பாணம், டிசெ.2

'கியூடெக் கரித்தாஸ்' நிறுவனத்தினர், மனித உரிமைப் பிரிவு, நோர்வே அகதிகள் பேரவை ஆகியவை இணைந்து நடத்திய நடமாடும் சட்ட உதவிகள் சேவை கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி லிகோரியார் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

இதில் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுகள் மற்றும் காணி உறுதிகள் என்பவற்றைப் பெறுவதில் சிரமத்தினை எதிர்கொண்ட மட்டுவில், கொடிகாமம், வரணி, கச்சாய், கல்வயல் பகுதிகளைச் சேர்ந்த 300 இக்குமேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு சட்ட உதவிகளைப் பெற்றுக் கொண்டனர்.

(202 -185)

விபத்தில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம் பெற்ற சைக்கிள் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சோதிவேம்படி, மானிப்பாயைச் சேர்ந்த உருத்திரன் குகதாஸ் (வயது 22) என்ற இளைஞரே படுகாயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(8-12-14)

இனந்தெரியாதோர் தாக்கி இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

கோப்பாய் சந்திப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்காகிப்படு காயமடைந்தார்.

உரும்பிராயைச் சேர்ந்த கனகலிங்கம் செல்வரூபன் (வயது 34) என்பவரே இவ்வாறு படுகாயடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

(எ-12-14)

தெருவெளி நாடகம் மேடையேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.2

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் மகளிர் திட்டபிரிவினர் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்போம் என்ற தெருவெளி நாடகத்தை மேடையேற்றி வருகின்றனர்.

கடந்த 25 ஆம் திகதி முதல் எதிர்வரும் 10 ஆம்திகதி வரை பெண்களுக்கு எதிரானவன்முறை ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (202 190)

பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து, உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே என் வாழ்வின் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் அனைத்துக்கும் நன்றி கூறுகின்றேன்.

என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் உம்மில்நிலைத்திருப்பேனென்று உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி!

(43338)(51)

நினைவஞ்சலியும்,அந்தியேட்டியும்

தோற்றம் 25 . 09 . 1963

மறைவு 03 . 10 . 2005

அமரர் கிட்டிணர் பரமேஸ்வரன்

(சங்கீத ஆசிரியர்)

இன்று (02.12.2005) வெள்ளிக்கிழமை அன்னாரது நினைவஞ்சலியும் சபிண்டிகரணமும், அந்தியேட்டி நிகழ்வும் அவரது இல்லத்தில் நடைபெறும்.

துவாரகை,
வரணி அக்கு, வரணி. (43390)(51)

குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1938 . 11 . 18

மறைவு 2005 . 11 . 02

அமரர் சின்னத்தம்பி நல்லையா

குடமியன், வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு 02.11.2005 அன்று அமரத்துவமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.12.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடமியன்,
வரணி. (43387)(51)

- குடும்பத்தினர்.

பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு

தோற்றம் 24.10.1951

மறைவு 18.11.2005

பொன்னையா ஐயர் சச்சிதானந்த ஐயர்

(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி)

அன்புடையீர்! 18.11.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் பாஷாண உத்வாசனம் நாளை (03.12.2005) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கும் அன்றையதினம் முற்பகல் 11 மணிக்கும் சபிண்டீகரணமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் கோயிலடி
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு. (43272)(51)

மனைவி, பிள்ளைகள்.

வலி.மேற்கு கரையோரங்களில் கடற்படையினர் மணல் அகழ்வு!

கடல் அரிப்பு ஏற்படும் அபாயம்; மீனவர்கள் சமாசத்திடம் புகார்

யாழ்ப்பாணம்,டிசெ.2

வலிகாமம் மேற்கு, தென்மேற்கு கரையோரப் பிரதேசங்களில் கடற்படையினர் மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால், கடல் அரிப்பு ஏற்பட்டுக் குடிமனைகளுக்குள் கடல்நீர் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வலிகாமம் மேற்கு, தென்மேற்கு கடற்றொழில் சமாசங்களினால் யாழ். மாவட்ட கடற்றொழில் சமாசங்களின் சம்மேளனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

காரைநகர், மாதகல், சுழிபுரம் போன்ற கரையோரப் பகுதிகளில் கடற்படையினர் மண்அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மீனவர்களின் நன்மை கருதி கடலை அண்மித்த பகுதியில் மீனவர் கிராமங்கள் அமைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்ட நிலப்பிரதேசத்திலேயே அதிகளவு மண் அகழ்வு இடம்பெறுகிறது.

இதனால், மீனவர் குடியிருப்பு அமைக்கும் திட்டம் நிறைவேறாமல் உள்ளது.

அத்தோடு, கடல் அரிப்பு ஏற்பட்டு நிலப்பரப்பு நீர்ப்பரப்பாக மாறுகின்ற அபாயநிலையும் ஏற்பட்டுள்ளது - என்றுள்ளது. (8-14)

இளைஞர் காயம்

தென்மராட்சி,டிசெ.2

மரத்திலிருந்து வீழ்ந்த தென்னோலை மட்டை சைக்கிளில் சென்ற இளைஞனின் தலையைத் தாக்கிக் காயப்படுத்தியது. அண்மையில் கொடிகாமத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த பொ.அஜந்தன் (வயது19) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இதேவேளை - வீதியில் நடந்து சென்ற வேளையில் பற்றைக்குள்ளிலிருந்து புறப்பட்ட பன்றியினால் தாக்கப்பட்டு இளைஞர் ஒருவர் காயமடைந்தார். அண்மையில் மந்துவிலில் இச்சம்பவம் இடம்பெற்றது. இதேயிடத்தைச் சேர்ந்த இ.கதிர்காமநாதன் (வயது 25) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

(202-117)

குடாநாட்டின் பிரதேச செய்திகள்

ஜி.சீ.ஈ.சாதாரண தர மாணவர்களுக்குக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.2

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்தும் ஜி.சீ.ஈ.சாதாரண தர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அமரர்களான வேலுப்பிள்ளை முத்துலிங்கம், முத்துலிங்கம் இராசலட்சுமி, கணபதிப்பிள்ளை ஜெயராசா ஆகியோரின் ஞாபகார்த்தமாக இந்தக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. (8-202)

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றவுள்ள மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களை மத்தியஸ்தர் சபையின் தலைவர் எஸ்.ரி.பத்மநாதன் வழங்குவதையும், மத்தியஸ்தர் சபையின் ஏனைய உறுப்பினர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

கல்வியங்காடு சமுர்த்தி வங்கிக்கு 13 லட்சம் ரூபா செலவில் கட்டடம்

வலி.கிழக்கு,டிசெ.2

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்வியங்காடு சமுர்த்தி வங்கிக்கு 13 லட்சம் ரூபா செலவில் நாயன்மார்க்கட்டில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படுகின்றது.

தற்போது நல்லூர் சட்டநாதர் கோயிலடியில் உள்ள வாடகைக் கட்டடம் ஒன்றிலேயே இந்த வங்கி இயங்கிவருகின்றது.

சமுர்த்தி வங்கி அதிகாரசபையினால் இக்கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நல்லூர்ப் பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (8-180)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

சமுர்த்தித் திட்டத்தின் கீழ் விரைவில் வீடுகள், மலசலகூடங்கள் அமைப்பு

வலி.கிழக்கு,டிசெ.2

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி வேலைத் திட்டத்தின் கீழ் வீடுகள், மலசலகூடங்கள் என்பன அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 பயனாளிகளுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் தலா 50 ஆயிரம் ரூபா வழங்கி புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை -

8 பயனாளிகளுக்கு மலசலகூடம் அமைக்கத் தலா 20 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் வசதி குறைந்த 18 வயதிற்கு உட்பட்ட அதிக அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களே சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்தார். (8-180)

தமிழீழ சர்வதேச மாணவர் பேரவை நடத்தும்

கணனிப் பயிற்சி நிலையங்களால் 500இற்கும் மேற்பட்ட மாணவர் பயன்

யாழ்ப்பாணம்,டிசெ.2

தமிழீழ சர்வதேச மாணவர் பேரவையின் கணனிப் பயிற்சி நிலையங்களில் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

இன்னும் பலருக்கு அனுமதிகள் வழங்கப்படவுள்ளன என்று மாணவர் பேரவைப் பொறுப்பாளர் எம்.கண்ணன் தெரிவித்தார்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்கில் மாணவர் பேரவையினால் இரண்டு இலவச கணனிப் பயிற்சி நிலையங்கள் தென்மராட்சியிலும் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டன. இந்த இரண்டு பயிற்சி நிலையங்களிலும் 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கணனிப் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

இருப்பினும் இன்னும் அதிக மாணவர்கள் அடுத்த ஆண்டு பயிற்சி நெறியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் திருநெல்வேலியில் உள்ள மாணவர் பேரவை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தமக்குரிய அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-13)

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் யுவதிகளுக்கு தையல் பயிற்சிகள்

வலி.மேற்கு,டிசெ.2

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினரால் தையல் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி இத்தகவலைத் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ள மகளிருக்கான தையல், மனையியல் பயிற்சியில் மனைப் பொருள்களை அலங்கரிப்பதற்கான பயிற்சியும் மேலதிகமாக வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு இறுதியில் பயிற்சிநெறிக்கு மகளிரைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஐ-175)

பாலங்களின் தடுப்புப் பலகைகள் சேதம்; கடல்நீர் கிராமத்தினுள் புகும் ஆபத்து

யாழ்ப்பாணம்,டிசெ.2

அராலியில் உள்ள பாலங்களின் தடுப்புப் பலகைகள் மற்றும் சுவர்கள் பழுதடைந்துள்ளன. இதனால், கடல்நீர் கிராமங்களுக்குள் புகும் அபாயம் தோன்றியுள்ளது.

இது தொடர்பாக மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் சி.பொ.வ.மா.க.முதலியார் தெரிவித்திருப்பதாவது:-

கடல்நீரை வழிமறித்து கல்லுண்டாய் வெளிப்பாலத்தில் இருந்து அராலி வரை தடுப்புப் பலகைகள் போடப்பட்டுள்ளன. இவை நீண்டகாலமாக மீள்புனரமைப்புச் செய்யப்படவில்லை.

தற்போது பழுதடைந்துள்ள தடுப்புப் பலகைகள் ஊடாகக் கடல்நீர் ஊர்மனைகளுக்குள்ளும் விவசாய நிலப்பரப்புகளுக்குள்ளும் உட்புகுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தைக் கவனத்தில் எடுத்து தடுப்புப் பலகைகளை மீள்புனரமைப்பதுடன் கட்டுமானங்களையும் மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ஐ-185-202)

வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம்

உங்கள் கிராமம் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருந்த போதிலும் உங்கள் கிராமம் தெரிவு செய்யப்படவில்லையா?

உலக வங்கியின் அனுசரணையுடன் மாகாண திட்ட ஒருங்கிணைப்புக்குழுவால் இறுதியாகத் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களின் பெயர்கள் பிரதேச செயலர்களால் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். ஒரு கிராமம் தகுதியாக இருந்தும் விடுபட்டு இருப்பின் கீழ்க்காணும் நடைமுறையில் நிவாரணம் கோர இடமுண்டு.

1. பிரதேச செயலர் மட்டம்: பிரதேச செயலர்களால் கிராம முன்னுரிமைப்பட்டியல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு 2 வார காலத்தினுள் முன்வைக்கப்படும் ஆட்சேபனைகள் செய்யலாம்.

2. மாவட்ட மட்டம்: பிரதேச மட்ட பதிலில் திருப்தி அடையாதவர்கள் அதனையும் குறிப்பிட்டு அரசாங்க அதிபருக்கு முறையிடலாம்.

3. மாகாண மட்டம்: அரசாங்க அதிபரது தீர்மானத்தில் திருப்தியடையாதவர்கள் கிராம புனர்வாழ்வுக் குழு வ.கி.மாகாண பிரதம செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம். பிரதம செயலாளரின் முடிவே இறுதி முடிவாகும்.

கிராமங்களின் தெரிவு நிறைவுற்று மாகாண ஒருங்கிணைப்புக் குழுவினதும் உலக வங்கியினதும் அங்கீகாரத்தை பெற்ற பின் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது. குறைகேள் தீர்வு நடைமுறைக்குப் பின் தெரிவு செய்யப்படும் கிராமங்கள் அடுத்தகட்ட திட்ட அமுலாக்கலில் உட்படுத்தப்படும்.

(சி/46378) (42-11-17)

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

Daido mopet (48cc) லைசென்ஸ், இன்சூரன்ஸ், ஹெல்மெற் தேவையில்லாத லீற்றருக்கு 90 Km இற்கு மேல் ஓடக்கூடிய உத்தியோகத்தர்களுக்கு உகந்த மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.ரகு, பொன்கந்தையா வீதி, M.M.V. வீதி, நெல்லியடி. (43454)

104 Sri தொடர் இலக்க LML வெஸ்பா ஸ்கூட்டர் (பட்டர் கலர்) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 077 6512934. (43392)

நாய்க்குட்டி விற்பனைக்கு

6 மாதங்கள் நிரம்பிய அல்ஷேசியன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 261003. (43461)

நல்லின பொமேரியன் கறுப்பு நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீராஜ், சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை. (43451)

காணியும் பெரிய கட்டடமும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுழிபுரத்தில் 15 பரப்புக் காணியில் அமைந்த 9500 சதுர அடிக் கட்டடம் உடன் விற்பனைக்குண்டு. சுற்று மதில் 9 அடி உயரம், வாகனத்தரிப்பிட வசதியும் சகல வசதிகளும் உடையது. மேல்மாடி வீடாகவும், தொழிற்சாலையாகவும், திருமண மண்டபம், களஞ்சியம் ஆகவும் பயன்படுத்தலாம். தொடர்பு: T.P. 077 6589400. (43391)

வீட்டுடன் காணி விற்பனைக்கு

29, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் உள்ள 1¼ பரப்பு காணியுடன் சிறிய வீடு எல்லா வசதியுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள 0776745812, 077 6198191. (43394)

தாதிப்பயிற்சி

O/L, A/L படித்த பெண் பிள்ளைகளுக்கான தாதிப்பயிற்சி வழங்கப்படும்.

A/L, Bio படித்தவர்களுக்கு முன்னுரிமை. நேரில் வரவும்

சம்பந்தர் மொடேர்ன் வைத்தியசாலை

8, இராமையாச் செட்டியார் வீதி, (அமுல் கிறீம் கவுஸ் அருகே)

(43466) யாழ்ப்பாணம் (21.

தவறிவிட்டது

சத்தியநாதன், வகீசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (842612969V), வங்கி ஆவணம் என்பன அடங்கிய பேர்ஸ் 30.11.2005 அன்று நாவாந்துறைக்கும், கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் விஸ்ணு ஜுவலறி, 181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (வின்சர் தியேட்டர் முன்பாக) T.P. 077 6618190 தகுந்த சன்மானம் வழங்கப்படும். (43468)

விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள DELL மற்றும் TOSHIBA PENTIUM III LAPTOP கொம்பியூட்டர்கள் மலிவான விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்புகட்கு:

TELEZONE (PVT) Ltd.

0777 276620

(C/46477) (21.11.17)

பூக்கன்று விற்பனைக்கு

முசந்தாஸ், செவ்வரத்தை, சைபிரஸ், யூகோபியா, பிலிம்பியா, பாம்ஸ் ஆகிய கன்றுகள் விற்பனைக்குண்டு.

கீறீன்பார்க்

152/2, kovil Veethi, Jaffna.

(43465) T.P 6563

Refresh System

புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை, மானிப்பாய், 077-6279671, 077-3253104.

(43247)(42.32.19.11)

Business Partners

யாழ் நகர்: Micro PC Systems,கஸ்தூரியார் வீதி 021-222 5893, Dart Enterprise புதிய சந்தை 021-222 3098, Sky Electronics ஸ்டான்லி வீதி 021 222 5349 **மானிப்பாய்:** Abinaya Multi Electronics யாழ் வீதி 077 6441886 **நெல்லியடி:** Micro PC Systems பொலிஸ் நிலையம் அருகில் 077 303 9356, Super Market நெல்லியடி சந்தி 021-226 4374, King Parrots கொடிகாமம் வீதி 0777 112122 **பருத்தித்துறை:** Prakash Electronics பஸ் நிலையம் 021-226 3652 **வவுனியா:** Micro PC Systems 024 4588339 **வெள்ளவத்தை:** Micro PC Systems: 011 4516764 **கொட்டாஞ்சேனை:** Micro PC Systems: 011 4619673

உதவிப்பணக் கொடுப்பனவைப் பெறலாம்

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான டிசெம்பர் மாத கொடுப்பனவை இன்று தபாலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேச செயலர் பற்றிக் டிறஞ்சன் அறிவித் துள்ளார்.

எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும் அதற் குப் பின் உதவிப் பணம் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-204)

G.A.Q, 1st in Com.

யாழ்.,பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

* மேற்குறிப்பிடப்பட்ட பாடநெறிக்கு பல்கலைக்கழகத்தினால், விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்குரிய பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
* இவற்றிற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

விவரங்களுக்கு- S.அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி-யாழ்.

(43319(26.11.17)

இலவசம்! இலவசம்!!

காஸ் (GAS COOKER) அடுப்பு வாங்குபவர்களுக்கு இலவசமாக (Gas Cylinder) காஸ் சிலிண்டர் வழங்கப்படும். மார்கழி மாதம் 31-12-2005 வரையும். விரையுங்கள் மேலதிக விவரங்களுக்கு :

PILLAIYAR STORES

31, MANIPAY ROAD, JAFFNA
Phone 021 222 2829, 021 222 5595
Mobile 0777 222717 Mr. Anthony

(43463) (26.

31ஆம் நாள் நினைவஞ்சலி

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

பாலசுந்தரம் கமலாதேவி

(கிளி)

அவர்கள் 02.11.2005 அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அன்னாரின் இல்லத்தில் அஞ்சலி செலுத்தியோர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும், தொலைபேசியில் அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும் இரங்கல் உரை நிகழ்த்தியோருக்கும் மேலும் அவரின் இறுதிக்கிரியைகள் சிறப்புற நடத்த உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் எல்லோருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டோருக்கும் அன்னார் சுகவீனமுற்றிருந்தபோது உதவியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்று (02.12.2005) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியை நிகழ்வுகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (43467)(32-11-21)

அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

ம.கொ.சிவக்கொழுந்து செட்டியார்

(உரிமையார், சுரில் புடைவையகம், பிரதான வீதி, பருத்தித்துறை)

ம.கொ.சிவக்கொழுந்து செட்டியார் 30.11.2005 புதன்கிழமை இந்தியாவில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
சி.நடராஜன்.

(J/46476)(32)

கிளிநொச்சியில் பெய்த மழையினால் நுளம்புகள் அங்கு பல்கிப் பெருக்கம்!

நோய்கள் பரவும் அபாயம்; தடுப்பு நடவடிக்கைகள் மும்முரம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட பல பிரதேசங்களில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கிளிநொச்சி பதில் பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் எம். தவராஜா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட குழிகளில் நீர்தேங்கி நிற்கிறது.

இதனால் நுளம்புகள் அங்கு அதிகமாகப் பர வுகின்றன. தொற்றுநோய்களும் பரவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. முரசுமோட்டை, பரந்தன் ஆகிய இடங்களில் இது குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு ஆலோசனைகளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மூலம் வழங்கிவருகிறோம் என்று மேலும் தெரிவித்தார். (த-14)

ஜெயபுரம் தெற்கில் வீதிகள் படுமோசம்

பூநகரி,டிசெ.2

ஜெயபுரம் தெற்கு வீதிகள் பல மோசமாகச் சேதமடைந்துள்ளதால் பிரயாணம் செய்வதில் மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மேற்படி கிராமத்தில் 6 வீதிகள் பெரும் சேதமடைந்துள்ளன. சமீப நாள்களில் பெய்த பெரும் மழையால் அவ்வீதிகள் மேலும் சேதமடைந்தன.

இந்நிலையில் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் இவ்வீதிகளில் பயணம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (த-403-202)

அடர்ந்த காடுகளில் அடைமழை; அதனால் யானைகள் வீதிகளில்!

பரந்தன்,டிசெ.2

வன்னிப் பெருநிலப்பரப்பில் அடர்ந்த காடுகளிலும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தொடர்ச்சியாக அடை மழை பெய்தது. இதனால் காடுகளில் இருந்து யானைகள் வெளியேறி வீதிகளில் நடமாட ஆரம்பித்துள்ளன. காடுகளை அண்டிய வீதிகளில் பயணிக்கும் மக்கள் பீதியுடனேயே செல்கின்றனர்.

அண்மையில் ஏ-9 பிரதான வீதியில் - கொக்காவில் சந்தியில் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களில் பயணம் செய்தவர்களை யானைகள் தாக்கியுள்ளன. அதன்போது மூவர் காயமடைந்தனர்.

இவ்வாறு வீதிக்கு வந்துள்ள யானைகள் பயணிகளைத் தாக்கும் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதனால் காடுகளுக்குச் சமீபமாக உள்ள வீதிகளில் செல்லுகின்ற மக்கள் யானைகள் எதிர்ப்படுமோ என்று அச்சமடைகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-352-202)

விசுவமடு, தருமபுரம், முரசுமோட்டை சந்தைகளில் இலையான்களால் கேடு!

பரந்தன்,டிசெ.2

விசுவமடு,தருமபுரம்,முரசுமோட்டைச் சந்தைகளில் இலையான்களின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனால் அங்கு சுகாதாரச் சீர்கேடுகள் எற்பட்டிருக்கின்றன.

சந்தைகளின் உட்புறத்திலும் வெளியிலும் கழிவுகள் தேங்கிக் காணப்படுகின்றன. உடனுக்குடன் இதனைச் சுத்தப்படுத்தாததால் இலையான்கள், நுளம்புகள் பெருகியிருக்கின்றன.

இங்கு விற்கப்படும் மரக்கறிகள், இறைச்சி, மீன் வகைகள், உணவுப் பொருள்களில் பெருமளவு இலையான்கள் மொய்த்துக் காணப்படுகின்றன. இதனால் மக்கள் மிகுந்த அருவருப்புடன் பொருள்களை வாங்கிச் செல்வதைக் காணமுடிகிறது.

தற்போது மழைகாலம் என்பதால் கால் நடைகள் மழைக்கு ஒதுங்கி சந்தையை மேலும் அசுத்தம் செய்கின்றன. தொற்று நோய்கள் பரவுவது தொடர்பாக பரவலாக அறிவுறுத்தப்பட்டு வரும் இந்தவேளையில் இந்தச் சந்தைகளில் சுகாதாரச் சீர்கேடு இப்படி இருப்பது கவலையளிப்பதாக மக்கள் கூறுகின்றனர்.

உரிய தரப்பினர் கவனித்து சந்தைச் சுற்றாடலைத் துப்புரவுடன் பேண ஆவன செய்யவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-352-204)

கரைச்சிப் பிரிவில் நடமாடும் சேவைகள்

பரந்தன்,டிசெ.2

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ளவர்களின் பிறப்பு, இறப்புப் பதிவுகளில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக அண்மையில் அப்பகுதிகளில் நடமாடும் சேவைகள் நடத்தப்பட்டன.

இந்த நடமாடும் சேவையின்போது வடக்கு - கிழக்கு மாகாண மேலதிகப் பதிவாளர் நாயகம் க.சதாசிவஐயர் பிறப்பு, இறப்புப் பதிவுகளை மேற்கொண்டார்.

இதில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், கிளிநொச்சி மாவட்ட இறப்புப் பிறப்புப் பதிவாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (த-352-203)

ஜெயபுரம் தென்னிந்தியத் திருச்சபையின் தூயமோகன் ஆலயத்தினரால் கடன் உதவித் திட்டத்தின் கீழ் அப்பகுதியைச் சேர்ந்த 4 பேருக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் இது.

ஜெயபுரம் திருச்சபை ஊழியர் அருட்சகோதரர் சிவகுமார் தையல் இயந்திரங்கள் வழங்குவதையும் பயனாளிகளையும் படத்தில் காணலாம். *(படம்: ஜெயபுரம் செய்தியாளர்)*

வவுனியா நகரில் திருட்டுகள் அதிகரிப்பு

ஒட்டுசுட்டான்,டிசெ.2

வவுனியா நகரில் தற்போது திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

பண்டாரிக்குளம், மாமடுவ ஆகிய பகுதிகளில் கடந்த 14ஆம் திகதி மட்டும் பல சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.(த-204-341)

மூல்லைத்தீவு ம.வி. மாணவர்கள் இரண்டாமிடம்

ஒட்டுசுட்டான்,டிசெ.2

மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பினர் அகில இலங்கை ரீதியில் நடத்திய அறிவியல் வினாடி - வினாப் போட்டியில் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது.

கொழும்பு மருதானை பற்றிமா ஆலயத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-341-203)

அனர்த்தங்கள் குறித்து உடனுக்குடன் அறிவிக்க தொலைபேசி வசதி இல்லை!

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு

பரந்தன்,டிசெ.2

கிளிநொச்சி, திருவையாற்று கிராமத்தில் இயங்கிவரும் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அலுவலகத்திற்கு தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப் படவில்லை.

இதனால், தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை உடனுக்குடன் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு அறிவிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கடும் மழை, வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் காலங்களில் அவற்றை உடனுக்குடன் உயரதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கும் அதற்கான உடனடி வேலைகளைச் செய்வதற்கும் முடியாதிருப்பதாகவும் -

எனவே இந்த அலுவலத்துக்கு தொலைத் தொடர்பு வசதிகள் உடனடியாக ஏற்படுத்தப் படுவது அவசியம் என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (த-352-203)

மீளக்குடியமர்ந்த ஒட்டுசுட்டான் மக்களுக்கு சுயதொழில் உதவி

ஒட்டுசுட்டான்,டிசெ.2

இராணுவ நடவடிக்கையின்போது இடம் பெயர்ந்து இந்தியாவில் தங்கியிருந்து மீண்டும் தமது சொந்த இடத்திற்குத் திரும்பியுள்ள ஒட்டுசுட்டானைச் சேர்ந்த மக்களுக்கு ஐ.ஓ.எம். நிறுவனத்தினர் சுயதொழில் உபகரணங்கள் வழங்கியுள்ளனர்.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்கள், நீர்ப்பம்பிகள் போன்ற உபகரணங்கள் வழங்கப்பட்டன. (த-341-203)

வன்னிச் செய்திகள்

கல்மடுநகர் அபிவிருத்திச் சங்கங்கள் இணைந்து மாதாந்தம் சிரமதானம்

கிளிநொச்சி,டிசெ.2

கிளிநொச்சி, கல்மடுநகர் கிராம சேவை அலுவலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஏற்பாட்டில் கிராம அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு மாதாந்த சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்மடுநகர் கிராம அபிவிருத்திச் சங்கம், சம்புக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம், நாவில் நகர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியனவே இப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

இதன்படி ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் இச்சிரமதானப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இம்மாதத்துக்கான சிரமதானப் பணியினை மூன்று கிராம அபிவிருத்திச் சங்கங்களும் இணைந்து கடந்த 15ஆம் திகதி கல்மடுநகர் மூலிகைப் பண்ணையில் மேற்கொண்டன. இதில் சுமார் இருநூறு வரையான மக்கள் ஈடுபட்டனர்.

அடுத்த மாதத்துக்கான சிரமதானப் பணிகள் இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறும் என்று கல்மடுநகர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.யோகநாதன் தெரிவித்தார். (த)

அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் வவுனியா வடக்கில் 20 பாடசாலைகள்

ஒட்டுசுட்டான்,டிசெ.2

வவுனியா வடக்கு வலயத்தில் உள்ள பல பாடசாலைகள் பல்வேறு வசதிக் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றன.

இந்த வலயத்தைச் சேர்ந்த 89 பாடசாலைகள் இராணுவ நடவடிக்கையின் போது முற்றாக அழிக்கப்பட்டன.

அவற்றுள் 63 பாடசாலைகள் மீளவும் சொந்த இடத்தில் இயங்கி வருகின்றன.

20 பாடசாலைகள் குடிதண்ணீர், மலசலகூடம் போன்ற அடிப்படை வசதிகளே இல்லாமல் இயங்குகின்றன.

இதனால் இங்கு கற்கும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவர்களின் குறைகளை நீக்கவும் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யவும் உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-341-204)

மக்கள் கூடும் இடங்களில் புகைத்தலைத் தவிர்க்குக!

தமிழீழ சுகாதார சேவை அறிவுறுத்து

கிளிநொச்சி,டிசெ.2

பொதுமக்கள் கூடுகின்ற இடங்களில் புகைபிடிப்பதைத் தவிர்க்குமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பிரிவு அறிவுறுத்தியிருக்கிறது.

புகைபிடிப்பதால், புகைபிடிப்பவ ருக்கு மட்டுமன்றி, அந்தப் புகையினை சுவாசிக்கும் சகல மக்களுக்கும் உடல், உளப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே பேருந்துகள், பொதுச்சந்தைகள் மற்றும் மக்கள் கூடுகின்ற பொது இடங்களில் புகைபிடிப்பதை தவிர்ப்பதன் மூலம் ஏனையோருக்கு புகையினால் பாதிப்புகள், தாக்கங்கள் ஏற்படாமல் செய்யுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் அறிவுறுத்தியுள்ளனர். இது தொடர்பான செய்திக் குறிப்பு ஒன்றை சுகாதார சேவையினர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளனர். (த)

30.11.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

மனிதா வலை

செல்லுமிடமெங்கும் டிக்கட் தொடர் இல. 200784683 இலிருந்து 200800663 வரை

சீட்டிழுப்பு இல. 1663

வெற்றி எண்கள்

13 22 37 60

சுப்பர் எண் 10

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.1,55,78,800/- வெல்லப்படவில்லை

வெற்றி எண்கள்	வெற்றி பெற்றோர்	பரிசுத் தொகை	மொத்தம்
4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல.	-	1,55,78,800/-	-
4 வெற்றி எண்கள் மட்டும்	02	10,00,000/-	20,00,000/-
3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல.	26	5,000/-	1,30,000/-
3 வெற்றி எண்கள் மட்டும்	423	1,000/-	4,23,000/-
2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல.	1,400	500/-	7,00,000/-
2 வெற்றி எண்கள் மட்டும்	20,861	40/-	8,34,440/-
1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல.	19,915	20/-	3,98,300/-
1 வெற்றி எண் மட்டும்	2,96,178	10/-	29,61,780/-
		மொத்தம்	74,47,520/-
[illegible]	5	1,00,000/-	5,00,000/-
வெல்லப்படாட மொத்த பரிசுத் தொகை			79,47,520/-

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 1,73,70,500/-

[illegible]

திருகோணமலை	200791349-4-07
பொலன்னறுவை	200790024-2-42
கேகாலை	200787543-5-54
கொழும்பு	200799184-6-56
காத்தான்குடி	200795940-5-96

13 விவசாய சம்மேளனங்களுக்கு நெல் அறுவடை இயந்திரங்கள்

யு.என்.டி.பி. நிறுவனம் வழங்குகிறது

வலி.கிழக்கு,டிசெ.2

யாழ். மாவட்டத்தில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் நன்மைகருதி ஐ.நா. அபிவிருத்தி நிறு வனம் (யு.என்.டி.பி.) கமநல சேவைத் திணைக்களத்தின் ஊடாக 13 நெல் அறு வடை இயந்திரங்களை வழங்கவுள்ளது.

மட்டுவில் வடக்கு, தாவளை, இயற் றாலை, நாவற்குழி கிழக்கு, வட்டுக்கோட்டை - சங்கரத்தை, காரைநகர், குடத் தனை, செம்பியன் பற்று, இருபாலை தெற்கு, கரணவாய் மத்தி, கரவெட்டி மத்தி, புத்தூர் கிழக்கு, வேலணை வட கிழக்கு, மாதகல் ஆகிய 13 விவசாய சம்மேளனங்களுக்கு இந்த இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சுந்த ரேசன் தெரி வித்தார்.

விவசாயிகள் எந்தநேரமும் அதைப் பெற்றுப் பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-180)

அரச உத்தியோகத்தர் சங்கத்தின் பொதுக் கூட்டம்

கைதடி,டிசெ.2

வடக்கு - கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ்.மாவட்ட அங்கத்தவர்களுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கத்தின் வடமாகாண இணைப்பாளர் இ.கி.இராசக்கோன் தலைமையில் யாழ்.வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக சுகாதார சேவைகள் மாகாண பிராந்தியப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஏ.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானமும் கௌரவ விருந்தினராக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள யாழ்ப்பாண உதவிப் பணிப்பாளர் எஸ்.இராமநாதன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அன்றைய தினம் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் அங்கத்தவர்கள் யாவருக்கும் ஒருநாள் கடமை லீவு வழங்கப்படும் எனவும் புதிதாகச் சேர விரும்பும் அங்கத்தவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளலாம் எனவும் தலைமைச் செயலக செயலாளர் ஆர்.மணிவண்ணன் தெரிவித்துள்ளார். (8-75)

எய்ட்ஸ் தின கொடி வாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம், சுகவாழ்வுக்கான பயணம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து கடந்த முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் 5ஆம் திகதி வரை கொடி வாரத்தை அனுஷ்டிக்கின்றன. (8-190)

கௌரவிப்பும் பிரியாவிடையும்

வலி.கிழக்கு,டிசெ.2

யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் இதுவரை காலமும் சேவையாற்றியும், இடமாற்றலிலும் செல்லும் அலுவலர்களுக்கான கௌரவிப்பு, பிரியாவிடை நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட விவசாய பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நலன்புரி சங்கத்தினால் இந்த நிகழ்வு நடத்தப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டாக்டர் பொ.இராமநாதன் தெரிவித்தார். (த-180)

வணிகக் கல்வி கணக்கீடு கல்வி நிலையம்

கொக்குவில் மேற்கு, கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு 2006 இற்கான தரம் 1 முதல் A/L வரையிலான பிரத்தியேக வகுப்புக்கள் ஆரம்பம்.

05-12-2005 திங்கட்கிழமை பிற்பகல் 3.00

தரம் 10 O/L 2006

வணிகக் கல்வி கணக்கீடு
A/L 2006 கிரயக் கணக்கீடு
A/L 2007 பங்குடமை
புதிய பிரிவுகள் ஆரம்பம்
அனுமதிகள் வழங்கப்படுகிறது 05-12-2005

ஆசிரியர் K. அற்புதராஜா (B.Com. Dip. in Edu.)

(42479) (24-15-16)

மரண அறிவித்தல்கள்

கணபதி செல்லத்துரை

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 33/11, இராமநாதன் வீதி, கலட்டியில் (யாழ்ப்பாணம்) வசித்தவரும் தற்போது பிரான்ஸில் வசிப்பவருமாகிய கணபதி செல்லத்துரை 30.11.2005 புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான திரு.திருமதி கணபதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் செல்வரத்தினம் (கனி- பிரான்ஸ்), செல்வநாயகம் (பாப்பாத்தி - பிரான்ஸ்), செல்வகுமார் (சொக்காணி - பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும் சோமாவதி(பிரான்ஸ்), சறோ (பிரான்ஸ்), யோகேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் செல்லத்துரை, அப்புத்துரை, நாகம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

MR.S.SELVANAYAGAM,
52, ANE.DUG GALLIENIE,
93380 PIERRFITTE,
FRANCE.

தகவல்:
S.கமலநாதன்
(மருமகன்).

(42482) (24-15-17)

இராமசாமி உருத்திரா

பருத்தித்துறை, ஆத்தியடியைச் சேர்ந்தவரும் முன்னாள் கரவெட்டி Sacrd Heart கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி ஆசிரியரும் யாழ். பல்கலைக்கழக பேரவை முன்னாள் உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியும் வழக்கறிஞருமான இராமசாமி உருத்திரா J.P.U.M. (B.Sc. (London), Advocate, Commissiner For Oaths) அவர்கள் நேற்று (01.12.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி - சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகாதேவா, பகீரதி அம்மாள் மற்றும் சதானந்தன் (சட்டத்தரணி) ஆகியோரின் சகோதரனும் திலகவதி கனகசபாபதி, பசுவதி சற்குணன், விஜியராணி உருத்திரேஸ்வரன் (சட்டத்தரணி), கலைமதி மாணிக்கராஜன் (கனடா), சுந்தரேசன் (கனடா), சந்திரசேகரன் (கனடா), சண்முகநாதன் (கனடா), புஸ்பராணி விக்னராஜ (கொழும்பு), காந்திமதி துஷ்யந்தன் (கொழும்பு) ஆகியோரின் சிறிய தகப்பனும் மாணிக்கதாசன் (கனடா), சுலோசனா சிவகுருநாதன் (பரந்தன்), நீலாம்பிகை குணரத்தினம் (கொழும்பு), வாசுகி (கொழும்பு) ஆகியோரின் மாமனும் சிவனேஸ்வரி கருணாகரன் (இத்தாலி), சிவனேஸ்வரன் (லெபனான்), இராணி ஆகியோரின் தாய்வழி சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (02.12.2005) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பருத்தித்துறை கோரியடி கந்தனைவெட்டி ஆலடி (கோரியடி) இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வி.எம். வீதி,
ஆத்தியடி,
பருத்தித்துறை.

தகவல்:
திருமதி உ.விஜியராணி
(பெறாமகள்-சட்டத்தரணி).

(42478) (24-15-17)

திருமதி சிவகாமி கனகசபை

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த திருமதி சிவகாமி கனகசபை அவர்கள் 30.11.2005 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் கனகசபை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் சகோதரியும், காலஞ்சென்ற வித்துவான் கார்த்திகேசுவினதும், திருமதி வள்ளிப்பிள்ளை சின்னத்தம்பியின் மைத்துனியும் ஆவார்.

மங்கையற்கரசி, சண்முகரத்தினம் (உடையார்கட்டு), சுந்தரமூர்த்தி (ஆஸ்திரேலியா), இராசாம்பிகை (மைதிலி), கோசலாதேவி (கோமதி -ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற பொன்னையா (Petta Traders), புனிதவதி (உடையார்கட்டு), விஜயா (ஆஸ்திரேலியா), சிவாஜி (Telecom), சுதேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ரமணன் (நோர்வே), விஜிதா, சக்திதரன் (Customs), முகுந்தன் (நியூசிலாந்து), ராகவன், விமலேந்திரன், கமலேந்திரன், கீதா (ஆசிரியை), சுரேந்திரன், திலீபன், பிரியங்கா, சாரங்கன், பிரசாத், ரமேஷ், திவ்யா ஆகியோரின் பேர்த்தியும் கார்திகனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.12.2005) சனிக்கிழமை காலை 8 மணி முதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு பி.ப 4 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

58, புதுச்செட்டித்தெரு,
கொழும்பு - 13

தகவல்
பிள்ளைகள்

(சி/464480) (21-15-17)

யாழ்ப்பாண மாநகர சபை

கூறுவிலை கோரல் - 2005

மாநகர சபையில் கட்டட நிர்மாண வேலைகளுக்கு அவசரமாகத் தேவைப்படும் நாகர்கோவில் மணல் மற்றும் கண்டா வளை மணலை மாநகர சபை எல்லைக்குள் வழங்கக்கூடிய வழங்குநர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

ஒரு கியூப் மணலிற்கான விலையினை படிவ அமைப்பில் தயாரித்து அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இட்டு ''ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 2005.12.15 அன்று பி.ப.2 மணிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக இடவும்.

கிடைக்கப் பெற்ற கூறுவிலைகள் யாவும் 2005.12.15 அன்று பி.ப.2.30 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும். மணல் பெறுவதற்கான சிபார்சுக் கடிதம் எம்மால் வழங்கப்படும்.

சீ.வீ.கே.சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

திகதி: 30.11.2005

(சி/46482)(32-15-17)

யாழ்ப்பாண மாநகர சபை

கேள்வி அறிவித்தல் - 2005

கீழ்க் குறிப்பிடப்படும் யாழ்.நவீன சந்தை கட்டட திருத்த வேலைகளுக்கான கேள்விகள் ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

- கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி : - 08.12.2005
- கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி :- 09.12.2005 பி.ப. 2.30 மணி
- கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 09.12.2005 பி.ப. 3 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு **'ஆணையாளர் , மாநகரசபை, யாழ்ப்பாணம்'** என முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது அலுவலக கேள்விப் பெட்டியில் நேரடியாக இடப்படவேண்டும்.

கேள்விப்பத்திர கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படவேண்டும். மேலதிக விவரங்களை வேலைப்பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வேலை விவரம்	இக்ராட் நிறுவனத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆகக் குறைந்த தரம்	மீளளிக்கக் கூடிய வைப்புக் கட்டணம்	மீளளிக்க முடியாத கேள்விப்பத்திரக் கட்டணம் வற் உட்பட
1) நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் தெற்குப் பகுதிக் கட்டடத் திருத்தம்	08	11,000	1,150
2) நவீன சந்தைக் கட்டடத் தொகுதியின் வடக்கு மற்றும் தெற்குப்பகுதிக்கு இடைப்பட்ட தொகுதிக் கட்டடத் திருத்தம்	08	3,300	575
3) சின்னக்கடைச் சந்தை மாடிப்படி அமைத்தல்	இக்ராட் பதிவு அவசியமில்லை	3,500	575

சீ.வீ.கே.சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி/46483)(22-15-17)

U.S. DEPARTMENT of STATE

நுழைவு அரிய சந்தர்ப்பம் நழுவ விடாதீர்கள் வரும் சில தினங்கள் மட்டுமே

TRAVEL.STATE.GOV

வருடந்தோறும் அமெரிக்க அரசினால் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு 55000 பேருக்கு வழங்கப்படும் வதிவிட விசாவுக்காக

உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீசீலிக்க!!!

சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்

முடிவுத்திகதி 04.12.2005 வரைக்கும்

தொடர்புகளுக்கு

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, காரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குக்ன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 3027 Fax - 021 222 3381

பாராட்டி வாழ்த்துகின்றோம்

29.11.2005 இல் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட

நவரத்தினராஜா சதீஸ்குமார்

அவர்களை மேலும் பல உயர்வடைய மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

பிரான்சிலுள்ள சிறிய தாய் தந்தையரான செல்வராசா, செல்வ சித்தப்பா, மகேஸ்வரியும் இத்தாலியிலுள்ள மாமா மாமியான கணேஸ், குணரஞ்சினி, மைத்துனன் சாருஜன், கொழும்பிலுள்ள பெரிய தந்தையாரான விபுலானந்தன், பாலசுப்பிரமணியம்.

(43484) (25-(54-34-13)

விசேட அறிவித்தல்

கொழும்பு அப்பலோ வைத்தியசாலையின் 24 மணி நேர அவசர சிகிச்சைக்கான அம்புலன்ஸ் வசதியினைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: **அப்பலோ வைத்தியசாலை**

தகவல் நிலையம், 272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(அ-46489) (54-13-34) T.P: 0214590500

கண்ணீர்க் காணிக்கை

பருத்தித்துறைச் சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவரும் தற்போதைய போசகருமாகிய மூத்த சட்டத்தரணி

அமரர் இ. உருத்திரா

B.Sc.Lond. (Advocate)

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்கி அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் மனைவி மற்றும் குடும்ப அங்கத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பருத்தித்துறைச் சட்டத்தரணிகள்,
பருத்தித்துறை நீதிமன்றம்,
வதிரி, கரவெட்டி.

(அ-46845) (25-54-34-13)

கண்ணீர் அஞ்சலி

அல்வாய் சதாபொன்ஸ் கல்வி நிலையத்தின் ஸ்தாபகரும் அதிபருமாகிய

அமரர் சதாசிவம் சின்னத்தம்பி

அவர்கள் இறைபதமடைந்த செய்தி அறிந்து நாம் ஆழ்ந்த கவலையடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரதுகுடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை. (43487) (54-34-13) - அதிபர், ஆசிரியர்கள்.

இதயம் உருகி அஞ்சலி

அமரர் இ.உருத்திரா (B.Sc.)

(உயர் நீதிமன்றச் சட்டத்தரணி)

எமது புகழ் பூத்த பழைய மாணவரும் நீண்ட கால பழைய மாணவர் மன்றத் தலைவரும் தற்போதைய உப போஷகரும் கல்லூரி இடர்பட்ட காலங்களில் (1905-1990) கல்லூரி நிர்வாகத்துக்கு உறுதுணை யாக இருந்து , வளர்ச்சிக்கு கற்றுணாய் செயற்பட்டு பாரம்பரியங்களைப் பேணுவதில் உறுதிபூண்டு, இற்றைவரை செயற்பட்ட இ.உருத்திரா அவர்கள் 01.12.2005 அன்று வாழ்வில் நிறைவெய்தினார்.

அன்னாரது இழப்பினால் துவண்டு போயுள்ள குடும்பத்தினரதும் கல்லூரிச் சமூகத்தினரதும் துன்ப, துயரங்களில் நாமும் பங்குபெறுகிறோம்.

அன்னாரது ஆத்மா சாந்தி பெறுக!

பருத்தித்துறை. (அ-46487) (54-34-13) ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்.

சிறப்புற நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.2

பலாலி ஆசிரிய கலாசாலையின் கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்த ஒளிவிழா நேற்று கலாசாலை மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

முதலில் கல்வியங்காடு -திருநெல்வேலி வீதியில் அமைந்துள்ள கிறீஸ்வ தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுப்பும் நற் கருணை வழிபாடும் இடம்பெற்றன. இத்திருப்பலி ஒப்புக்கொடுப்பு இன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினரும் யாழ்.மறைக்கோட்ட முதல்வருமான அருட்கலாநிதி மைக்கல் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம் பெற்றது.

தொடர்ந்து விருந்தினர்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் தேவாலயத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு கலாசாலை மண்டபத்தில் கிறிஸ்தவ மாணவர் ஒன்றியத் தலைவர் அ.அருள்ஜெயரட்ணம் தலைமையில் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை கலாசாலை அதிபரும், மன்றக் காப்பாளருமான கு.சதாசிவமூர்த்தி கலாசாலை பிரதி அதிபர் த.காங்கேசபிள்ளை ஆகியோரும்-நிகழ்த்தினர் சிறப்புரையைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ் வுகள் இடம் பெற்றன.

இதேவேளை-நேற்றைய உதயனில் 4ஆம் பக்கத்தில் வெளியான ஒளிவிழா தொடர்பான செய்தியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் கு.சதாசிவமூர்த்தி என்று பிரசுரமாகி விட்டது.பலாலி ஆசிரியர்கலாசாலையின்அதிபர் கு.சதாசிவமூர்த்தி என்பதே சரியானதாகும். (த-12-410)

கால்நடைத் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர் நியமனம்

வலி.கிழக்கு,டிசெ.2

வடக்கு - கிழக்கு மாகாண கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் புதிய மாகாணப் பணிப்பாளராக டாக்டர் சி.கே. சிவபாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் கடமையாற்றி வந்த டாக்டர் எஸ்.சிவலிங்கம் ஓய்வுபெற்றுள்ளதை அடுத்தே மத்திய மாகாணசபைப் பிரதிப் பணிப்பாளராக கடமையாற்றிவந்த சி.கே. சிவபாலசிங்கம் கடந்த நவம்பர் மாதம் முதல் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-180)

ஸ்ரீகணேசா கொன்ராக்ரர்ஸ்

Sri Kanesa Contractors

யாழ்.நகரிலுள்ள வேலைத்தளத்திற்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

1. நிர்மாண மேற்பார்வையாளர் (பயிலுநர்)
2. மேசன்
3. தொழிலாளர்

தொடர்பு: 330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே.: 0773039629

(மக்கள் வங்கி காங்கேசன்துறைவீதிக்கு முன்னால்). (43466)

கலைஞர்கள் தேவை

ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள சிறீக்குமரன் இசைமன்றத்திற்கு பாடகர், பாடகிகள் தேவை.

மற்றும் கிற்றார், டிறம்ஸ், ஒக்ரபாற் ஆகிய வாத்தியக் கலைஞர்களும் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மேல்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
விண்ணப்ப முடிவு திகதி: 15.12.2005
தொலை பேசி இலக்கம்: 0776581167.

சிறீக்குமரன் இசைமன்றம்
ஆடிபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (43471)

CHEMISTRY

✱ முழு அலகு உள்ளடங்கலான ஆண்டு ரீதியான வினா-விடைக் கருத்தரங்கு
(Sat., Sun., -12.00) By: Dias B.sc. (Hons) (43490)
BRIGHTMAN - நாவலர் வீதி.

மகிளாகரா யாழ்ப்பாணம்

ராஜா யாழ்ப்பாணம்

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவில் 200 நாள்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
சுப்பர் ஸ்ரார் ரஜனி, இளையதிலகம் பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல், வினித், விஜயகுமார் நடித்த

சந்திரமுகி காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30,

நாகம்ஸ் சுன்னாகம்

விக்ரம், அஸின், வடிவேல், மணிவண்ணன் நடித்த

காட்சிநேரம்: புது நேரம் 11.00, 3.00, 7.00,

03 ஆம் திகதி முதல் அரங்கில் ஆணை

53ஆவது பிறந்தநாள் வாழ்த்து

திரு. வாமதேவா தியாகேந்திரன்

வம்சத்தில் வாமதேவனுக்கு
வள்ளலாம் தியாகேந்திரன்
வளர்ச்சியினாலே
வழங்கி வரும் சேவைகள்
வளர வேண்டும் என்றும்

துன்பங்கள் களைய எண்ணி
தூயமனம் கொண்டவர்
இன்பமாக மக்கள் என்றும்
இன்புற்று வாழ்வதற்கு

அன்பு உள்ளம் கொண்டு
ஆயிரமாம் உதவிகளை
அறக்கொடையால் வழங்கும்
அரிய சேவை நிலைக்க

வைரவரின் துணை கொண்டு
- என்றுமே
வளர்பிறையாய் வாழ்வதற்கு
வயதினிலே ஐம்பத்து மூன்றை
மாதத்திலே மார்கழி ஈராம் நாளை
மனம் நிறைந்து வாழ்த்துகிறோம்.

வாழ்த்துபவர்கள்:
தியாகி அறக்கொடை நிறுவன
நிர்வாகத்தினரும், ஊழியர்களும்.

(அ-46486) (54-34-13)

9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 - 03 - 1946

உதிர்வு 11 - 12 - 1996

அமரர் இராமலிங்கம் நவரத்தினம்

ஆண்டுகள் ஒன்பது ஆனதப்பா!
மறந்துவிடுமா எம் நெஞ்சம்
உங்கள் நினைவு எங்கள் மனதை
ஏங்கி ஏங்கி தவிக்க வைக்கிறது அப்பா!

இல.14, பெண்டிகோஸ் லேன், யாழ்ப்பாணம். (43494) (54-34-13)

உங்கள் பிரிவால் துயரும் மனைவி, பிள்ளைகள்.

மரண அறிவித்தல்கள்

வினாசித்தம்பி உதயச்சந்திரன்

(உதயன் சவுண்ட் ஒளி, ஒலி அமைப்பாளரும் முன்னாள் சுன்னாகம் வேலழகன் தொழிற்சாலையின் போர்மன்)

கடந்த 29.11.2005 அன்று காலமான அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74,பத்திரகாளி கோயிலடி,
வண். மேற்கு,
யாழ்ப்பாணம்.

(43481) (54-34-13)

தகவல்:
குடும்பத்தினர்.

கந்தையா தியாகராஜா

(முன்னாள் தபால் அதிபர், மலேசியா)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் A.G.A லேன் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் தற்போது சுதுமலையில் வசித்தவரு மாசி : கந்தையா தியாகராஜா அவர்கள் நேற்று (01.12.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற சிவாராஜா, சரஸ்வதி, மகேஸ்வரி (மலேசியா), கணேச மூர்த்தி (ஓய்வு பெற்ற மாவட்ட இலங்கை வங்கி முகாமையாளர்), சாம்பமூர்த்தி (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர்), மதனகாமேஸ்வரி, சுந்தரமூர்த்தி (பிரான்ஸ்), ஈஸ்வரி (ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.12.2005) வியாழக்கிழமை சுதுமலை மத்தி சுதுமலையில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை - மத்தி,
சுதுமலை.
T.P.: 2222554

(43496) (54-34-13)

தகவல்:
ஈஸ்வரி (சகோதரி)
(ஓய்வுபெற்ற பதிவு வைத்தியர்).

நீர்வேலியில் இரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவர்களில் கிருஷ்ணகுமார் என்பவர் ஒரு பிள்ளையின் தந்தையெனக் கூறப்பட்டது.

மூவரும் தலைப்பகுதிலேயே துப்பாக்கிச் சூட்டுச் காயத்துக்கு இலக்காகினர் எனக் கூறப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக, மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

பசளைக்குத் தேவையான மரக்குழைகளை 'லாண்ட் மாஸ்டரில்' ஏற்றியிறக்கினார்கள் எனக் கூறப்படும் மேற்படி இளைஞர்கள் மூவரும் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக் குச் சமீபமாக, பிரதான வீதியிலுள்ள வீடொன் றின் முன்பாக நின்று நண்பர்களுடன் தேநீர் அருந்திக் கொண்டு நின்றனர் என்றும் -

அச்சமயம் இவர்களை நோக்கி திடீரென தொடர்ச்சியாகத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க் கப்பட்டன என்றும் - கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து வலிகாமம் கிழக்கு, கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் ஆகிய பகுதிகளில் நேற்றிரவு பதற்றநிலை நிலவியது என அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. உயிரிழந்த இளைஞர்களது சடலங்கள் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டுப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. காயமடைந்த இளைஞருக்கு யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் கிசிச்சை அளிக்கப் படுகிறது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-13-15-119-72)

மறியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி பிரதேச செயலகங்களின் முன்பாக, மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோர், இடம்பெயர்ந்து வசிக்கும் குடும்பங்களுக்குத் தொடர்ந்தும் இடம்பெயர்வு நிவாரணமே வழங்கப்பட வேண்டும் என்றும் - எக்காரணம் கொண்டும் சமுர்த்தி முத்திரை மூலமாக நிவாரணம் வழங்கப்படக் கூடாது என்றும் - எம்மிடம் முறையிட்டனர்.

இது விடயமாக, நாம் உடனடியாக கடமை நிமிர்த்தம் திருகோணமலையில் தங்கியுள்ள யாழ். மாவட்ட அரச அதிபர் க. கணேசுடன் தொடர்பு கொண்டு பேசினோம்-

இறுதியில் ஜூலை,ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்குரிய சமுர்த்தி முத்திரைகளின் பெறுமதிக்குச் சமமாக, பட்டியல்கள் மூலம் மேற்படி குடும்பங்களுக்கு நிவாரணத்தை வழங்குவது என்றும் -

ஒக்ரோபர் முதல் மாதாந்தம் வழங்கப்படும் நிவாரணத்தை இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணமாக தொடர்ந்தும் வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது - என்று அவர் தெரிவித்தார். (எ)

(பகிஷ்கரிப்பு பற்றிய செய்தி, படம் 3 ஆம் பக்கத்தில்)

இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் இராணுவ நெருக்குவாரங்கள் ஆகியன குறித்து கண்காணிப்புக் குழுவிடம் தமிழ்ச்செல்வன் எடுத்துக் கூறினார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலுள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து அவற்றை அங்கிருந்து அகற்றுவதன் மூலமே வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த கண்காணிப்புக் குழுவினர், இது தொடர்பில் புதிய ஜனாதிபதியை இனிவரும் நாள்களில்தான் தாங்கள் சந்திக்க உள்ளார்கள் எனவும், அந்தச் சந்திப்பில் இது தொடர்பிலானவற்றை விவாதிப்பார்கள் எனவும், புதிய அரசியல் சூழலில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தங்களுக்கு கால அவகாசம் தேவைப்படுகிறது எனவும் தெரிவித்தனர். (எ-க)

வடக்கு- கிழக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் புறப்பட்டனர். அவ்வேளையில், 'உதயன்' செய்தியாளருக்கு கண்காணிப்புக் குழுத் தலைவர் தகவல் வெளியிட்டார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

மாவீரர் வாரத்திலும், அதையொட்டி தமிழர்களின் தேசியத்தலைவர் பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரையையும் அடுத்து வடக்கு - கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவுவதாக எமக்குத் தகவல் கிடைத்தது.

ஆனால், இப்பொழுது கிழக்கிலிருந்து எமக்குக் கிடைத்த தகவல்களும், யாழ்ப்பாணத்தில் இன்று (வியாழனன்று) நாம் நேரில் பார்த்த நிலைமைகளும் பதற்ற நிலை தணிந்து வருவதை தெரியப்படுத்தியுள்ளன. அவற்றை எம்மால் உணரக்கூடியதாகவுள்ளது.

இதுபற்றியும் தற்போதைய நிலைமைகள் குறித்தும் விடுதலைப் புலிகளின் தலைவர்களோடு இன்று நாம் கலந்துரையாடினோம்.

புதிய அரசுத் தலைவரிடமிருந்து புலிகளுக்கு நாங்கள் எந்தச் செய்தியையும் எடுத்து வரவில்லை. அதேபோன்று புலிகளிடமிருந்து எந்தச் செய்தியையும் கொழும்பு அரசுக்கு நாம் கொண்டு செல்லவுமில்லை - இவ்வாறு அவர் தெரிவித்தார். (எ-க-3)

விபத்தில் படுகாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.2

வீதியில் நிறுத்திவைக்கப்பட்ட நிலையில் கம்பி இறக்கிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் லொறியில் அடுக்கப்பட்டிருந்த கம்பி மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்தவரின் கீழ்த் தாடைப் பகுதியில் ஏறியதில் அவர் படுகாயமடைந்தார்.

நேற்று இரவு 7 மணியளவில் யாழ். ஸ்ரான்லி வீதிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. முள்ளியவளையைச் சேர்ந்த விநாசித்தம்பி துசிகரன் (வயது-32) என்பவரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த வராவார். காயமடைந்தவர் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

காயமடைந்தவரிடமிருந்து பெறுமதியான பொருள்கள் சில வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (எ-12-14)

கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றபின்னர் கண்காணிப்புக் குழுவினர் புலிகளுடன்முதன்முறையாக நடத்திய சந்திப்பு இதுவாகும்.

ஜனாதிபதிக்கு நெருக்கமாக இருக்கும் சில அரசியற் கட்சிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவையும் அதன் செயற்பாடுகளையும் கடந்த காலங்களில் கடுமையாக விமர்சித்திருந்தன.

இதன் எதிரொலியாகவே நேற்றைய தினம் கண்காணிப்புக் குழு வன்னி செல்வதற்கு ஹெலிகொப்டர் வசதி செய்துகொடுக்கப்படவில்லையெனத் தெரிகிறது. (எ-க)

ஐ.தே.கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுகளை நடத்தியுள்ளனர். இவர்கள் வெகு விரைவில் ஆளுங்கட்சிப் பக்கம் பாய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும், இந்த உறுப்பினர்களை ஆளுங்கட்சிக்குள் உள்வாங்குவது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இறுதியான தீர்மானம் எதையும் இன்னும் மேற்கொள்ளவில்லையென விடயமறிந்த வட்டாரங்கள் கூறின.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளுங்கட்சிக்குள் கொண்டுவருவதற்கு ஆளுங்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் இணக்கத்தையும், அபிப்பிராயத்தையும் பெறுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என மேலும் தெரியவருகிறது. (எ-3)

தேர்தல் முடிவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நவம்பர் 17ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது தென்பகுதியில் நான்கு லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களின் பெயர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டுள்ளதால் அவர்கள் வாக்களிக்க முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று வடக்கு- கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலினால் அப்பிரதேச மக்களும் வாக்களிக்க முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர். இது தனிமனித சுதந்திரத்திற்கும் அடிப்படை உரிமைகளுக்கும் விடப்பட்ட சவால்.

தேர்தல் சமயத்தில் வேட்பாளர்களுடனும், அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடனும் தேர்தல் ஆணையாளர் நடத்திய கலந்துரையாடலின்போது -

''சுதந்திரமான வாக்களிப்பு நடைபெறுவதற்கு எங்காவது தடை ஏற்படுத்தப்பட்டதாக ஆதாரபூர்வமான முறைப்பாடுகள் கிடைத்தால் அங்கு மீள்வாக்குப்பதிவு நடத்தப்படும்'' - எனத் தேர்தல் ஆணையாளர் உறுதியளித்தார். ஆனால், இதுவிடயத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் முறைப்பாடுகளையும், கோரிக்கைகளையும் தேர்தல் ஆணையாளர் நிராகரித்துவிட்டார்.

எனவே, நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் சட்டவிரோதமானது, இத் தேர்தலைச் செல்லுபடியற்றதாக அறிவிக்க வேண்டும் எனக்கோரி நாம் உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளோம். - என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். அரசியல் அழுத்தங்களின் பேரில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எமக்குப் பாதகமாக அமையுமானால் அதனை எதிர்த்து சர்வதேச நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்யப்படும். - எனவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். (எ-க)

புலிகளுடனான பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சந்தித்தார். நேற்றுமாலை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை அவர் சந்தித்தார்.

அந்தச் சந்திப்பின் பின்னர், அது குறித்து இலங்கை - இந்தியத் தரப்புகள் கூட்டறிக்கை ஒன்றை விடுத்தன.

அந்த அறிக்கையின் பிரகாரம் மங்கள சமரவீர இச்சந்திப்பின்போது தெரிவித்ததாவது:-

போர்நிறுத்தம் தொடரவேண்டும் என்பதில் இலங்கை அரசு அக்கறை கொண்டிருக்கின்றது. போர் நிறுத்த ஒப்பந்தத்தை மேலும் அர்த்தமுள்ள விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக அது தொடர்பான ஏற்பாடுகள் மறுபரிசீலனைசெய்ய இலங்கை அரசு விரும்புகின்றது.

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு இலங்கை அழைப்பு விடுத்திருக்கிறது. பேச்சு வெளிப்படையாக்வும் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாகவும் அமைய வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருதுகிறார் என்றார் சமரவீர.

இதற்காக - தேசிய அளவில் ஒத்த கருத்தை எட்டுவதற்கு மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகம் மேற்கொள்ள இருக்கும் அணுகுமுறை குறித்தும் அவர் இந்தியப் பிரதமருக்கு விளக்கினார்.

அமைதி நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்படும் முன்னேற்றங்கள் குறித்து இந்தியாவிடம் இலங்கை அரசு அவ்வப்போது தெரிவிக்கும் என்றும் இந்தியத் தலைவர்களிடம் சமரவீர உறுதியளித்தார். இதற்காக இந்தியத் தரப்பில் அவருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

உள்நாட்டு அரசியல் ரீதியான அணுகுமுறை மூலமே பிரச்சினைக்கு நிலையான தீர்வு காணமுடியும் என்று இந்தியா நம்புகிறது எனக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இலங்கையின் பாதுகாப்பு,இறையாண்மை, அதன் எல்லைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா தொடர்ந்தும் ஆர்வம் காட்டுகிறது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார ஒத்துழைப்பு அதிகரிக்கப்படுவது உட்பட மேலும் பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. பரந்துபட்ட பொருளாதாரத்திற்கான உடன்பாட்டை இரு நாடுகளுக்கும் இடையில் விரைவில் இறுதி செய்வது குறித்தும் இருதரப்பிலும் வலியுறுத்தப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷவை விரைவில் இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு ஏற்கனவே விடுத்த அழைப்பை அமைச்சர் சமரவீரவிடம் இந்தியத் தலைவர்கள் மீண்டும் வலியுறுத்தினர் எனவும் இக்கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமரை சந்தித்த பிறகு மங்கள சமரவீர நேற்றுக் கொழும்புக்குப் புறப்பட்டார்.(எ-க)

குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''இப்படுகொலைகளை குடாநாட்டு மக்கள் சார்பாக வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதனைக் கண்டிக்கும் முகமாக இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படியும் வேண்டுகின்றோம். ''மிக அத்தியாவசிய சேவைகளை மட்டும் நடத்தி ஏனைய சேவைகள் யாவற்றையும் நிறுத்துவோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க)

ஐடியல் அக்கடமி
67/5, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்நகர்.
தரம் 6 முதல் O/L வரை
கல்வியாண்டு - 2006
ஆரம்பம்: 10.12.2005
சனி காலை 8 மணி
ஆசிரியர் விவரம் 08.12.2005 உதயனில்
கணித ஆசிரியரும், நிர்வாகியும்
V.N.பத்மநாதன் (43483)

DIPLOMA IN COMPUTER HARDWARE CLASSES
SPEED BATCH ONLY 4 WEEKS
GROUP CLASSES
Only For 10 Office Staffs
Days:- Fri,Sat, Sun.
Time:- 5.00p.m
Fees:1500/=
Batch Starts on 04-12-2005
C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.

கல்வியாண்டு~2006
தரம்:4 முதல் O/L வரை
மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கான
புதிய முறைகளை அறிமுகப்படுத்துகின்றோம்.
சயன்ஸ் அக்கடமி
அரியாலை. நல்லூர்.
இரண்டு இடங்களிலும் ஒரே நாளில் ஆரம்பம்
புதிய வகுப்புகள் மாவும் 05.12.2005 ஆரம்பமாகின்றன
தரம்: 8,9,10 ஆங்கில இலக்கியம் இம்முறைஆரம்பம்

COLLEGE OF ENGLISH
பிறவுண் வீதி, யாழ்.
ஆறே மாதத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
SPOKEN ENGLISH WITH GRAMMAR
By:T.THANENDRAN
புதிய பிரிவு ஆரம்பம்:
03.12.2005
sat.,sun. 4.30 p.m.
(43495)

மரண அறிவித்தல்

ஞானசேகரம் பாலசுப்பிரமணியம் (பாலா)

கேணியடி, கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ஞானசேகரம் பாலசுப்பிரமணியம் (பாலா) அவர்கள் நேற்று (01-12-2005) வியாழக்கிழமை அன்று லண்டனில் மருத்துவமனையில் காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கேணியடி,
கொக்குவில் மேற்கு. (43483)

தகவல்:
உறவினர்கள்.

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.